
வார இதழ்

# தேசியம்

THESIYAM තේසියම්

www.thesiyamnews.com

WELLA HAIR DRESSING
WELLA
வெலா சலூன்
Ladies & Gents
FACIAL | STRAIGHTING | BLEACHING | MASSAGING | THREADING | STEP CUT | LAYER CUT



No.08, Nallur New Market, Kalviyankadu, Jaffna.
Tel : 021 205 4116 | 077 684 6262 | 071 1000 023

இதழ் - 3 | 09.06.2023 - 15.06.2023 | வள்ளுவர் ஆண்டு 2054 | பக்கங்கள் 12 | விலை : ரூ.70.00



# கஜேந்திரகுமாரின் கைது என்? எதனால்?

## தீவிரத் தமிழ்த் தேசியவாதம் குறி வைக்கப்படுகின்றதா?

பக்கம் 11



# அகண்ட இந்தியா! விஸ்தரிக்கப்பட்ட அயலகம்!!



## இந்திய வெளியுறவுக் கொள்கையில் பாரிய மாற்றம்!!



பக்கம் 9

## ஜெய்சங்கரின் அறிவிப்பினால் அதிர்வலைகள்!!


தேசியம்

ஆசிரியர் பீடம்

தொலைபேசி : +94 76 567 3339

மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com

இணையம் : www.thesiyamnews.com



## கஜேந்திரகுமாரின் கைது மூலம் அழுத்தமாக சொல்லப்பட்டிருக்கும் செய்தி...

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளு மன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் புதன்கிழமை காலை கொழும்பில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்து க்கு அழைத்து செல்லப்பட்டு விசாரணைகள் நடைபெற்று கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில், அவர் சரீர பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். மருதங்கேணியில் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை மற்றும் காவல்துறையினருடன் அவதூ றான வார்த்தைகளை பயன்படுத்தியமை போன்ற குற்றச் சாட்டுகளின் கீழே அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர். உண்மையில் இந்த கைதின் பின்னணி தொடர்பில் தமிழ் மக்கள் சிந்திப்பது அவசியமாகும்.

அண்மைக்காலமாக தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக முன் னெடுக்கப்பட்டுவரும் சிங்கள-பௌத்தமயமாக்கல் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக தொடர்ச்சியான போராட்டங்களை முன் னெடுத்துவரும் கஜேந்திரகுமார் அணியினரை அச்சுறுத்தி பணியவைக்கும் ஒரு செயற்பாடாகவே இதனை பார்க்க வேண்டியிருக்கிறது. தொடர்ச்சியாக இந்த அணி தனி அணி யாக போராடிவருகிறது. கஜேந்திரகுமார் அணியின் கொள் கை ஏனைய தமிழ்த் தேசியத் தரப்புகளின் அரசியல் கொள்கைகளில் இருந்து தனித்து இருந்தாலும், அல்லது ஏனைய தரப்புகளுடன் ஒன்றிணைந்து பயணிக்க முடியாத தரப்பாக அது இருந்தாலும் அவர்கள் இன்று முன்னெடுக்கும் போராட்டம் மிக முக்கியமான ஒரு போராட்டமாகும். காரணம், அரசாங்கமும் அத னோடு இணைந்த தரப்புகளும் வெளிப்படையாகவும் திமிர்த் தனத்தோடும் முன்னெடுக்கும் கலாசார-பண்பாட்டு அழிப்பை வெளியுலகுக்கு கொண்டு வருவதிலும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலை சற்று தாம தமாக்கியதிலும் இவர்களுடைய போராட்டம் முக்கிய பங்கு வகித்திருக்கிறது என்பதை மறுக்க முடி யாது.


இவ்வாறு தங்களுடைய சிங்கள-பௌத்த நிகழ்ச்சி நிரலுக்கு தடையாக இருக்கும் தரப்பை அடக்கி வைக்கும் ஒரு செயற் பாடாகவே நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரன் கைது மற்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது களை பார்க்க முடிகிறது. சிங்கள தேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு எதிராக நிற்போருக்கு "கைது" அல்லது "சிறை" என்ற செய் தியை மீண்டும் தமிழர்களை நோக்கி அரசாங்கமும் பாது காப்பு படைகளும் எச்சரிக்கை விடுத்திருக்கின்றன. இதனை சர்வசாதா ரணமாக தமிழ்த் தலைமைகள் எடுத்துவிட முடி யாது. காரணம், தமிழர் தேசத்தில் மிகப்பெரும் வேலைத் திட் டங்களை முன்னெடுப்பதற்கு அரசாங்கமும் அதன் அடிவருடி களும் திட்டங்களை தீட்டி வருகிறார்கள் என்பதை அண்மை க்கால சம்பவங்கள் வெளிச்சம் போட்டு காட்டியுள்ளன. இந் நிலையில் தங்களுடைய நிகழ்ச்சி நிரலை எவ்வித எதிர்ப் புகளும் இல்லாமல் முன்னெடுப்பதற்கே அவர்கள் விரும்பு கிறார்கள். ஆகவே தங்களுடைய திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் ஒரு சிலரையும் அச்சுறுத்தி மௌனிக்க செய்து விட்டால் சுலபமாக காய்களை நகர்த்திவிடலாம் என எதிர் பார்க்கிறார்கள்.

எனவே கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைதை ஒரு அரசியல் கட்சியின் விடயமாகவோ அல்லது அவரின் நடவடிக் கைக்காகவோ கைது செய்யப்பட்டார் என்றோ விட்டுவிட முடி யாது. இது அனைத்து தமிழ்த் தலைமைகளுக்கும் தமிழ் மக் களுக்கும் விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகவே பார்க்கவேண் டும். ஆகவே தமிழர் தேசத்தில் முன்னெடுக்கப்படும் சிங்கள- பௌத்தமயமாக்கல் திட்டங்களுக்கு எதிராகவும், அவற்றிற்கு எதிராக போராடியோரை அச்சுறுத்தியதற்கு எதிராகவும் தமி ழர் தேசம் ஓரணியாக ஒன்றிணைவது அவசியமாகும். இதில் அரசியல் காழ்ப்புணர்ச்சி-அரசியல் விரோதம் என்பதற்கு அப் பால் தமிழர் தேசத்தின் மீது விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத் தல் என்ற அடிப்படையில் பேரெழுச்சி கொள்வது அவசியம். ஏனெனில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினருக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தல் வெறுமனே அவர்களுக்கு மாத்திரம் உரியதல்ல, அது தமிழினத்துக்கு விடுக்கப்பட்டிருக் கும் அச்சுறுத்தல் என்ற அடிப்படையில் அரசாங்கத்தின் அரா ஜகத்தை சர்வதேசத்துக்கு கொண்டு செல்வதற்கு தமிழர் தேசம் ஓரணியில் எழுவது அவசியம் என்பதை கூறிவைக் கின்றோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்...

# உண்மையில் கைது செய்யப்பட்டது கஜேந்திரகுமார் மட்டுமல்ல, பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையும் தான்:

## தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா.



உண்மையில் கைது செய்யப்பட்டது கஜேந்திரகுமார் மட்டுமல்ல, பாராளு மன்ற ஜனநாயகத்தின் ஜீவத்துடிப்பு க்களில் ஒன்றான உறுப்பினர்களின் சிறப்புரிமையும் கூடத்தான் என குறிப் பிட்டுள்ளார் தமிழத் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறீகாந்தா

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் கைது செய்யப் பட்டதை கண்டித்து வெளியிட்ட அறி க்கையிலேயே இதனை குறிப்பிட்டுள் ளார்.

அந்த அறிக்கையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜே ந்திரகுமார் கைது செய்யப்பட்டது முற் றிலும் சட்டவிரோதமானதாகும். கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கு, மருதங்கேணியில் இரண்டு பொலீஸ் புலனாய்வாளர்கள் தமக்கு தொல்லை கொடுக்கும் விதத்திலும், சந்தேகத்திற் கிடமான முறையிலும் நடந்து கொண் டதாகவும், அவர்களில் ஒருவர் தன்னை தாக்கியதாகவும், தொடர்ந்து இன்னுமொரு பொலீஸ் அலுவலர் கைதுப்பாக்கியைக் காட்டி தன்னை மிரட்டியதாகவும், கஜேந்திரகுமார் மனித உரிமைகள் ஆணையகத்தின் யாழ்ப்பாண இணைப்பாளருக்கு தொலைபேசி ஊடாக உடனடியாகவே முறையீடு செய்திருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மருதங் கேணி பொலீசார் கோரிய பிரகாரம் பொலீஸ் நிலையம் சென்று வாக்கு மூலம் வழங்கவும் அவர் சம்மதம் தெரிவித்திருந்தார்.

பாராளுமன்ற அமர்வுகள் ஆரம்பமாகி யுள்ள நிலையில் அவற்றிற்கு சமூக மளிக்க வேண்டியிருந்ததால், அமர்வு கள் முடிவடையும் வரையில் வாக்கு மூலம் வழங்குவதற்கு பொலீசாரிடம் அவர் கால அவகாசமும் கோரியிரு ந்தார்.

குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட பொலீசாரி னால் தனது சிறப்புரிமை மீறப்பட்டிருக் கின்றது என்ற முறைப்பாட்டையும் அவர் நேற்று பாராளுமன்ற அமர்வில் சமர் ப்பிக்கவிருந்தார். இந்த விடயம் ஊடக ங்களிலும் வெளியாகியிருந்தது. இந்த நிலையில் அவர் கைது செய்யப்பட் டதன் மூலம் பாராளுமன்ற உறுப்பி னர் என்ற அவரது சிறப்புரிமை அப்பட் டமாக மீறப்பட்டுள்ளது.

கஜேந்திரகுமாரின் கைதுக்கு பொலீ சார் பொறுப்பாக இருந்த போதிலும், அவர்கள் வெறும் கருவிதான். ஒட்டு மொத்த பொறுப்பும் அரசாங்கத்தினு டையது.

பாராளுமன்ற உறுப்பினர் ஒவ்வொரு வருடைய சிறப்புரிமையையும் மதிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. கஜேந்திரகுமார் விவகாரத்தில் என்ன நடந்திருக்கின்றது?

பாராளுமன்றத்தில் தங்கிநிற்கும் அர சாங்கம் பாராளுமன்றத்தை மதிக்கா மல் நடந்திருக்கின்றது. பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்ள முடியாமல் ஒரு உறுப்பினர் அரசாங்க உத்தர வின் பெயரில் தடுத்து நிறுத் தப்பட்டிருக் கின்றார், கைது செய்யப்பட்டிருக்கின் றார்.

இதற்கு பொறுப்பெற்க வேண்டியவர் யார்? பிரதமரா, பாதுகாப்பு அமைச்சரா, ஜனாதிபதியா அல்லது ஒட்டுமொத்த அமைச்சரவையும் ஜனாதிபதியுமா?

உண்மையில் கைது செய்யப்பட்டது கஜேந்திரகுமார் மட்டுமல்ல, பாராளு மன்ற ஜனநாயகத்தின் ஜீவத் துடிப்புக் களில் ஒன்றான உறுப்பினர்களின் சிற ப்புரிமையும் கூடத்தான்!

ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பின ர்கள் எத்தனை பேர் இந்த விடயத்தை ஒழுங்காக புரிந்துகொள்ளும் நிலை யில் இருக்கின்றார்கள்?

பாராளுமன்ற ஜனநாயகத்தின் மீது தொடுக்கப்பட்டிருக்கும் இந்த தாக்கு தல் தொடர்பில் நிலைமையை சீர் செய்வதற்கு பாராளுமன்ற சபாநாயக ருக்கு இப்பொழுதும் காலம் கடந்து விட வில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஓமானில் சிக்கித்தவிக்கும் வவுனியாப் பெண்: இலங்கைக்கு அழைத்துவரக் கோரி

# உச்ச நீதிமன்றில் மனு தாக்கல்!

வீட்டு வேலைகளுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லும் இலங்கைப் பெண் களை வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணி யக அதிகாரிகள் எவ்வாறு கையாள வேண்டும் என்பதை சுட்டிக் காட்டும் வழி காட்டல் தொகுப்பை தயாரிக்குமாறு கோரி உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஓமானில் வீட்டுப் பணிப்பெண்ணாக துன் புறுத்தப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த செல் லையா காளி அம்மா என்ற பெண்ணின் சார்பில் சட்டத்தரணி மஞ்சுளா பாலசூரிய வினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டு ள்ளது.

மனுவின் பிரதிவாதிகளாக வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் ஏ.ஏ.எம். ஹில்மி, அதன் பணிப்பாளர்கள், தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாண யக்கார, அமைச்சின் செயலாளர், ஓமான் தூதுவர் அமீர் அஜ்வாட் உள்ளிட்ட 11 பேர் பெயரிடப்பட்டுள்ளனர்.

மனுதாரர் காளி அம்மா ஏப்ரல் 2022 இல் வீட்டு வேலைக்காக ஓமன் சென்றார். ஓமான் செல்வதற்கு முன்னர் லெபனா னில் 06 வருடங்களும் குவைத்தில் 03 வருடங்களும் வீட்டுப்பணிப் பெண்ணா கப் பணிபுரிந்ததாக மனுவில் குறிப்பிடப்பட் டுள்ளது.

ஓமான் நாட்டில் உள்ள வீடொன்றில் பணி ப்பெண்ணாக வேலைக்குச் சென்ற அவர், அந்த வீட்டில் துன்புறுத்தப்பட்டதாகவும், வேலை திருப்திகரமாக இல்லை எனக் கூறி வீட்டை விட்டு வெளியே அனுப்ப அந்த வீட்டின் முதலாளிகள் முடிவு செய்த தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்பிறகு, சம்பந்தப்பட்ட பெண் ஓமா னில் அமைந்துள்ள பாதுகாப்பு மைய த்திற்கு அனுப்பப்பட்டார், அங்கு பாதிக் கப்பட்ட சுமார் 30 பெண்கள் இருந்தனர்.

அங்குள்ள பெண்கள் பல்வேறு துஷ்பிர யோகங்களுக்கு ஆளாகியிருந்தனர், அவர்களுக்கு போது மான உணவு கிடை க்கவில்லை என்று மனுவில் குறிப்பிடப்பட் டுள்ளது. பின்னர் அங்கு தங்கியிருந்த காளி அம்மா என்ற பெண் உள்ளிட்ட பெண்கள் போராட்டம் நடத்தியதைய டுத்து கடந்த மே மாதம் 25ம் திகதி உள் ளூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட தாக கூறப் படுகிறது.

எவ்வாறாயினும் காளி அம்மாவை இலங் கைக்கு அழைத்து வருமாறு வவுனியா வில் உள்ள வெளி நாட்டு வேலைவாய்ப்பு சேவை பணியக அலுவலகத்திடம் அவ ரது குடும்பத்தினர் கோரிக்கை விடுத் தனர். அதற்காக அதிகாரிகள் முதலில் 10 இலட்சம் ரூபாவும் பின்னர் 6 இலட்சம் ரூபாவும் கேட்டதாக மனுவில் கூறப் பட்டுள்ளது. இந்த பெண் சட்ட உதவி பெற முடியாத நிலை இருப்பதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணை இலங்கைக்கு அழை த்து வருவதற்கு தேவையான நடவடிக் கைகளை எடு க்குமாறு பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கு மாறு மனுதாரரின் சட் டத்தரணி நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

ஓமானில் அவருக்கு எதிரான சட்ட நடவடி க்கைகளில் சட்ட உதவியைப் பெறுவதற் குத் தேவை யான நிதியுதவியை ஏற்பாடு செய்யுமாறு வெளிநாட்டு வேலைவாய்ப் புப் பணியகத்தின் அதிகாரிகளுக்கு உத்த ரவிடுமாறும் அவர்கள் மனு செய்துள் ளனர்.

மத்திய கிழக்கில் வீட்டு வேலைக்குச் செல்லும் பெண்களின் உரிமைகள் மற் றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறு ப்பு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணிய கத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டிய மனுதாரரின் சட்டத்தரணி, அடிப் படை மனித உரிமைகள் தொடர்பான தீர் ப்பை வழங்குமாறு உச்ச நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.



# தென்னிலங்கை அரசுகளின் விருப்பங்களை நிறைவேற்றும் தமிழ் அரசுக் கட்சி

சிங்கள அரசாங்கங்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதை போல - அவர்களின் நிகழ்ச்சி நிரலில் இயங்குவதை போலவே, இலங்கை தமிழ் அரசு கட்சியின் அண்மைக்கால செயற்பாடுகள் அமைந்துள்ளது என்ற காட்டமான விமர்சனம், அந்த கட்சியின் அரசியல்குழு கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

இந்த தீவிரமான விமர்சனம் முன்வைக்கப்பட்டபோது, மூத்த தலைவர் இரா.சம்பந்தன், கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராசா உள்ளிட்ட பிரமுகர்கள் கனத்த மௌனத்துடன் அந்த விமர்சனத்தை செவிமடுத்துக் கொண்டிருந்தனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்தியகுழு கூட்டம் கடந்த 6ம் திகதி கொழும்பில், இரா. சம்பந்தனின் வீட்டில் நடைபெற்றபோது இந்த விமர்சனம் முன்வைக்கப்பட்டது.

கடந்த கூட்டத்தின் போது, கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஒரு முக்கிய விவகாரத்தை தெரிவித்தார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பிலிருந்து இலங்கை தமிழ் அரசு கட்சி வெளியேறியது தவறு என்றார். இது பொறுப்புணர்வற்ற நடவடிக்கை, இனநோக்கில் அல்லாமல் வட்டார வேட்பாளர்களின் நிலையிலிருந்து எடுத்த முடிவு என்றார்.

ஜனாதிபதி, இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டு தரப்புக்களை சந்திக்கும் போது இலங்கை தமிழ் அரசு கட்சி செல்கிறது. அவர்கள் தனித்து செல்கிறார்கள். இது உடனடியாக அல்லாவிட்டாலும் தீர்வு விவகாரத்தில், தீர்வு நோக்கி பயணத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றார்.

மாவை சேனாதிராசாவின் கருத்தை தமிழ் அரசு கட்சியின் கொழும்பு கிளை தலைவர் சட்டத்தரணி கே.வி.தவராசாவும் ஆமொதித்து கருத்து தெரிவித்தார்.

“இலங்கை தமிழ் அரசு கட்சியின் அண்மைக்கால நடவடிக்கைகள் சிங்கள அரசாங்கங்களின் விருப்பத்தை நிறைவேற்றுவதை போல, அவர்களின் நிகழ்ச்சி நிரலில் இயங்குவதை போலுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பை சிதைக்க வேண்டும், தமிழ் மக்களை பலவீனப்படுத்த வேண்டுமென்பது சிங்கள தரப்பின் விருப்பம். அதை இலங்கை தமிழ் அரசு கட்சியே செய்கிறது.

எங்களுக்கு மற்றக் கட்சிகளில் உள்ள தனிநபர்களுடன் உள்ள கோபத்தின் அடிப்படையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒற்றுமையை சிதைக்க முடியாது. வீடு தனியொருவரின் வீடல்ல. இது மக்களின், மக்களிற்காக உருவாக்கப்பட்ட வீடு. நாங்கள் இன்று இருப்போம். போய் விடலாம். ஆனால் வீட்டை சிதைத்து விட்டு செல்ல முடியாது.

களுவாஞ்சிக்குடியில் கட்சியின் மத்தியகுழு கூட்டம் நடந்த போது நான் ஒருவன்தான் கூறினேன், உள்ளூராட்சி தேர்தல் நடக்கவே நடக்காது. நடக்காத தேர்தலுக்காக பிரிந்து செல்லக்கூடாது. அப்படி முடிவெடுப்பது தவறு என்றேன். உள்ளூராட்சி வேட்பாளர்கள் சிலரை திருப்திப்படுத்த எடுக்கும் இந்த முடிவின் பாரதூரதன்மையை தெளிவாக சுட்டிக்காட்டினேன். இன்று உள்ளூராட்சி தேர்தல் இல்லை. விட்ட தவறை உணர்ந்து, மீண்டும் கூட்டமைப்பை உருவாக்கி, ஒற்றுமையாக செயற்பட வேண்டும்.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள், யுவதிகளை இழந்துள்ளோம். அந்த பாதிப்பு இன்றும் எங்கள் மனங்களில் உள்ளது. நாங்கள் எமது காலத்தில் எமது பொறுப்பை ஏற்று இயன்றவரை செயற்பட வேண்டும்.

கூட்டமைப்பை விட்டு வெளியேறி, தனித்து போட்டியிடப் போகிறோம் என கூறிவிட்டு முல்லைத்தீவில் முஸ்லிம் தரப்புடன் எப்படி கூட்டு வைத்துள்ளீர்கள்?

தனிப்பட்டரீதியில் எனக்கு யாருடனும் எந்த கோபமும் இல்லை.நான் சட்டத்தரணி. நீதிமன்றத்தில் பலருடன் வாதிடுவேன். பின்னர் அவர்களுடன் சண்டைபிடித்துக் கொண்டிருப்பதில்லை. நான் கட்சியின் கொள்கைரீதியிலேயே பேசுகிறேன்.

கட்சியின் தலைவர் என ஒருவர் உள்ளார். எந்த முடிவெடுப்பதென்றாலும் அவருக்கு தெரிந்தே எடுக்க வேண்டும். அவருக்கு தெரியாமல் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அது பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். தலைவர் யாராவும் இருக்கலாம். தலைவருக்கு தெரியாமல் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது.

உங்களுக்கு செல்வம் அடைக்கலநாதனுடன், மட்டக்களப்பில் ஜனாவுடன் தனிப்பட்ட கோபங்கள் யாருக்கும் இருக்கலாம். தனிப்பட்ட கோபங்களை கட்சியின் செயற்பாடுகளில் செயற்படுத்த முடியாது என்றார்.

இந்த கூட்டத்தின் போது, முன்னாள் செயலாளர் கி.துரைராசசிங்கம் பேச ஆரம்பித்தார். அவர் பேச ஆரம்பித்த போது, கூட்டத்திற்கு வந்த சிலர் தூங்க ஆரம்பித்தனர். அவர்கள் குட்டித்தூக்கம் போட்டு எழுந்த பின்னரும் துரைராசிங்கம் பேச்சை நிறுத்தவில்லை. சொந்தக்கதை சோக்கதைகளை புலம்பிக் கொண்டிருந்தார். அவரது புலம்பலை பொறுக்க முடியாத கட்டத்தில, கூட்டத்திலிருந்தவர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தனர்.

இதையடுத்து, மாவை சேனாதிராசா தலையிட்டு, உங்கள் சொந்தக்கதைகளை பேசி நேரத்தை வீணடிக்காமல் தேவையான விடயத்தை மட்டும் பேசுங்கள் என்றார்.

இதன் பின்னரே அவரது பேச்சை நிறுத்த முடிந்தது. இந்த கூட்டத்தின் போது, கட்சியின் அரசியல் யாப்பு திருத்தம் பற்றியும் ஆராயப்பட்டது.

யாப்பு திருப்பதம் பற்றி கடந்த மத்தியகுழு கூட்டத்திலும் ஆராயப்பட்டது. இப்போது, தமிழ் அரசு கட்சியின் யாப்பில், கட்சியின் நோக்கம் பற்றிய குறிப்பில் திருத்தம் செய்ய ஆராயப்பட்டது.

கட்சியின் யாப்பில், நோக்கம்- ஐக்கிய இலங்கை இணைப்பாட்சியின் அங்கமாக சுயநிர்ணய உரிமைக் கொள்கையின்படி ஒரு சுயாட்சித் தமிழரசும், ஒரு சுயாட்சி முஸ்லிம் அரசும் நிறுவி இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுடைய அரசியல், பொருளாதார, கலாசார விடுதலையை காண்பதே இக் கட்சியின் நோக்கமாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் சுயாட்சி முஸ்லிம் அரசு என்பதை நீக்கும்படி கட்சியின் ஒரு தரப்பினர் வலியுறுத்துகிறார்கள். முல்லைத்தீவில் தராசு சின்னத்துடன் கூட்டணி வைத்த தரப்பினர் அதை எதிர்க்கிறார்கள். அதை நீக்கினால் முல்லைத்தீவில் வாக்கு கிடைக்காதென்பது அவர்களின் நிலைப்பாடு. மறுவளமாக, சுயாட்சி முஸ்லிம் அரசு என்பதை வைத்திருப்பது கிழக்கு தமிழ் மக்களை அதிருப்தியடைய வைக்கும் என்பது இன்னொரு தரப்பின் வாதம்.

கடந்த மத்தியகுழு கூட்டத்தில் இது காரசாரமாக விவாதிக்கப்பட்டது. அந்த கூட்டத்தில் பேசிய சீ.யோகேஸ்வரன், கிழக்கு மக்களின் உணர்வுகளை வடக்கு தலைமையை கொண்ட தமிழ் அரசு கட்சி புரிந்து கொள்ளாதா? தமிழ் அரசு கட்சியிலும் கிழக்கு மக்கள் ஒதுக்கப்படுகிறார்களா? என காரசாரமாக கேள்வியெழுப்பியிருந்தார்.

கடந்த கூட்டத்தில், தமிழ் சுயாட்சி, முஸ்லிம் சுயாட்சி என்ற வாசகங்களை நீக்கி, தமிழ் பேசும் மக்கள் என பொதுவாக குறிப்பிடலாமென யோசனை தெரிவிக்கப்பட்டது. இரா.சம்பந்தனும் அதை சாதகமாக எடுத்துக் கொண்டார். எனினும், இறுதி தீர்மானம் எடுக்கப்படவில்லை.

## கஜேந்திரகுமார் கைது விவகாரம்:
## பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம்..!



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைதுசெய்யப்பட்டுள்ளதை பிரிட்டனின் நாடாளுமன்ற உறுப்பினர் எலியட் கொல்பேர்ன் கண்டித்துள்ளார்.

தமிழர்களிற்கான அனைத்து கட்சி நாடாளுமன்ற குழுவின் தலைவர் என்ற அடிப்படையில் கஜேந்திரகுமார் கைதுசெய்யப்பட்டதை நான் கண்டிப்பதுடன் அவரை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

பாரிய அட்டுழியங்கள் இனப்படுகொலைகளிற்கான நீதி மற்றும் இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்து குரல்கொடுக்கும் தமிழ் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளிற்கு பாதுகாப்பு இல்லை என்பதை இந்த கைது அச்சம் தரும் விதத்தில் வெளிப்படுத்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டுள்ளதை தொழில்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சியோபன் மெக்டொனாக்கும் கண்டித்துள்ளார்.

## ஏறாவூரில் சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட தாய்



மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள பிரதேசத்தில் 60 வயது முதியவரான பெண் ஒருவரை பிரத்தியோகமாக அமைக்கப்பட்ட அறை ஒன்றில் நீண்ட காலமாக அடைத்து வைத்து சித்திரவதை செய்யப்பட்டு வருகின்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஏறாவூர் 3ஆம் பிரிவு வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான 60 வயதுடைய ஸாகிலா உம்மா என்பவரை கடந்த 2 மாதங்களுக்கு மேலாக அறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

ஒரு வெற்றுக்காணியில் சிறைச்சாலைகள் போல பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட அறையில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இன்றி சிறைக் கைதியை போன்று அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த முதியவரான பெண் வெளியில் சென்று கதைப்பதாகவும் அதன் காரணமாக அவரது மகள் அவரை அடைத்து வைத்துள்ளதாகவும் கம்பி கூட்டின் கதவில் நின்று கொண்டு கதவை திறக்குமாறு தினமும் அழுது புலம்பிவருவதாகவும் தெரியவருகின்றது.



# இனப் படுகொலையால் சீரழியும் ரோஹிங்கியர்: பௌத்த மேலாண்மையால் சிதையும் மியான்மார்!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா -




மியான்மாரில் சிறுபான்மை ரோஹிங்கிய மக்கள் மீதான வன்முறை இன்னமும் தொடர்கிறது. இந்த மக்களின் கலாச்சார அடையாத்தை சிதைத்துஇன அழிப்பை மியான்மார் அரசு தொடரும் அவலத்தை சர்வதேச நாடுகள் கண்டித்துள்ளன. மியான்மார் இராணுவ அரசின் ஜுன்டா ஆட்சியில் தன் இன மக்களையும் கொடூரமாகவே தண்டித்து வருகிறதை காணலாம்.

**மியன்மார் – இரும்புத் திரை நாடு :**

பௌத்த மதத்தை ஆட்சி மதமாகக் கொண்டுள்ள மியன்மார் உலக நாடுகளினால் “இரும்புத் திரை நாடு” என்று அழைக்கப்படுகின்றது.

பர்மா என்ற பெயரில் அழைக்கப்பட்ட நாடு 1989ம் ஆண்டு மியான்மார் **( Union of Myanmar)** என்று மாற்றியமைக்கப்பட்டது. சுமார் 130 இனங்கள் வாழுகின்ற மியன்மாரில் நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளும் வட்டார வழக்குகளும் காணப்படுகின்றன.

பல்லாயிரக்கணக்கான பௌத்த விகாரைகள் நாடு முழுவதும் பரவியிருப்பதால், இது **‘Land of Pagodas’** என்றும் அழைக்கப்படுகின்றது. சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற ஆங் சாங் சூகி மியன்மார் இராணுவத்திற்கு எதிராக போராடி, ஜனநாயத்தை வெளிப்படுத்த பாடுபட்டார்.

இதனை எதிர்த்து இராணுவம் மேற்கொண்ட செயல்பாடுகளை விபரிக்கும் விதமாகவே “இரும்புத் திரை நாடு” என்று மியன்மார் அழைக்கப்படுகின்றது.

**இன அழிப்பின் உச்சம் 2010 :**

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில், பாராளுமன்ற தேர்தலில் ரோஹிங்கிய முஸ்லிம்கள் சார்பில் போட்டியிட்ட 3 பேர் வெற்றி பெற்று எம்பிக்களாக பாராளுமன்றம் சென்றனர். ஆனால் பின்னாளில் அவை செல்லாது என சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டு அவர்கள் நீக்கப்பட்டனர். கடந்த 2012 ஆண்டு முதல் மிகப்பெரிய அளவில் ரோஹிங்கிய மக்கள் அங்குள்ள பௌத்த மத தீவிரவாதிகளால் சொல்லணா துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர்.

மியான்மாரில் மிகப்பெரிய இன அழிவையே (Genocide) நடத்தினர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம் ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் கொலை செய்யப்பட்டனர், உயிரோடு எரிக்கப்பட்டனர். மிகப்பெரிய மனித உரிமை மீறல்கள் மியான்மர் அரசால் ரோஹிங்கிய முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டது.

**ஐநா மனித உரிமை ஆணையம் :**

இது தொடர்பாக ஆய்வில் ஈடுபட்ட ஐநா பிரதிநிதிகளும் மனித உரிமை ஆணைய நிர்வாகிகளுமான மார்சுகி ட்ரூஸ்மேன், ராதிகா மற்றும் கிறுஸ்டோஃபர் சிடோட்டி ஆகியோர், மிகப் பெரிய இன அழிவே அங்கு நடைபெற்றதாகவும், முழுக்க முழுக்க மியான்மர் இராணுவத்தின் நேரடி ஆதரவுடன் அவை நிகழ்த்தப்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

நாகரீகத்தின் உச்சத்தில் மனிதர்கள் வாழ்வதாக கருதப்படும் இக்கால கட்டத்தில் இப்படியொரு பயங்கரமும் நடைபெறுகின்றதா என்று சிந்திக்கும் அளவு மியன்மார் - பர்மாவில் ரோஹிங்கிய மக்களுக்கு எதிரான தாக்குதல்கள் உச்சத்தை அடைந்திருக்கின்றன. மியான்மார் - பர்மாவில் நடக்கும் இனப்படுகொலைகள் நெஞ்சைப் பிழியும் காட்சிகளாக மனதை உருத்துகின்றன.

**பாரிய மனித உரிமை மீறல்கள் :**

கொலை, கற்பழிப்பு, பாலியல் வன்புணர்வு, உயிரோடு எரித்து கொலை செய்தல், துடிக்கத் துடிக்க உடற்பாகங்களை வெட்டுதல் போன்ற சகித்துக் கொள்ள இயலாத மனித உரிமை மீறல்கள் அங்கு நடந்தியிருப்பதாகவும், மிகபெரிய இன அழிப்பிற்கான அடிப்படை உதாரணமாக (a textbook of ethnic cleansing) அவை அமைந்திருப்பதாகவும் தங்கள் அறிக்கையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

கிட்டத்தட்ட 50 ஆயிரம் முஸ்லிம்கள் மியான்மர் இராணுவத்தாலேயே கொலை செய்யப்பட்டிருக்கின்றனர். 4,50,000 பேர் வங்கதேசத்திற்கும், 40 ஆயிரம் பேர் இந்தியாவுக்கும் அகதிகளாக தப்பி வந்தனர்.
மியான்மரில் வன்முறையால் கடந்த ஆண்டு மட்டும் சுமார் 6,700 ரோஹிங்ய இஸ்லாமியர்கள் கொல்லப்பட்டதாக மெடிசின்ஸ் சான்ஸ் பிராண்டியர்ஸ் அமைப்பு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ராக்கைன் மாகாணத்தில் பெரும்பான்மையாக வசித்து வந்த ரோஹிங்ய இன இஸ்லாமியர்கள் மீது கடந்த ஆகஸ்ட் மாதம் முதல் மியான்மர் ராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. அவர்களது வீடுகளை தீயிட்டு கொளுத்தி, பெண்களை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கியதாக குற்றச்சாட்டு எழுந்தள்ளது. இதைத் தொடர்ந்து சுமார் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட ரோஹிங்ய இன மக்கள் வாழ்வாதாரத்தை தேடி அண்டை நாடான வங்கதேசத்தில் அடைக்கலம் புகுந்துள்ளனர்.

**யார் இந்த ரோஹிங்கிய மக்கள்:**

ரோஹிங்கிய மக்கள் மியான்மரில் இராக்கைன் மாநிலத்தின் வடக்கே வசிக்கும் இந்தோ – ஆரிய இனக்குழுவாகும். இவர்கள் ரோஹிங்கிய மொழியைப் பேசுகின்றனர்.

ரோஹிங்கிய மக்கள் இராக்கைன் மாநிலத்தின் பூர்வகுடிகள் என ரோஹிங்கிய மக்களும், சில ஆய்வாளர்களும் கூறும் அதே வேளையில், இவர்கள் பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் வங்காளத்தில் இருந்து வந்து குடியேறியவர்கள் எனவும்,அல்லது குறைந்தது 1948 பர்மிய விடுதலைக்குப் பின்னரும், 1971 வங்கதேச விடுதலைப் போரின் பின்னரும் குடியேறியவர்கள் எனவும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பௌத்த மதத்தை பெரும்பான்மையாக கொண்ட மியான்மர் நாட்டின் ‘ராக்கைன்’ பகுதியில் வசிக்கும் குறிப்பிட்ட இன மக்கள் தான் ரோஹிங்கிய இனத்தவர்கள். கிட்டத்தட்ட 15 லட்சம் ரோஹிங்கிய மக்கள் அங்கு வசித்து வந்தனர், அனைவருமே முஸ்லிம்கள். இவர்களது பூர்வீகத்தை தலைமுறை பின்னோக்கிப் பார்த்தால், 15 ஆம் நூற்றாண்டு முதல் அவர்களது பூர்வகுடிக்கான தடயங்கள் மியான்மர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் கிடைப்பதாக ஆய்வறிக்கை ஒன்றில் தெரிவிக்கிறது.

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பனியுடனான யுத்த கால கட்டமான 1826ஆம் ஆண்டு, ரோஹிங்கிய முஸ்லிம்கள் ‘ராக்கைன்’ பகுதியில் குடிபெயர்கின்றனர். மியான்மார் அரசு 1982 ஆம் ஆண்டு, குடியுரிமை சட்டம் ஒன்றை வகுக்கிறது. பல பகுதிகளிலிருந்தும் இடம் பெயர்ந்து வந்து தங்கள் நாட்டில் வாழும் பல்வேறு குழுக்களையும் மாறுபட்ட பல இனங்களையும் மியான்மர் தேசத்து குடிமக்களாக அங்கீகரிக்கும் சட்டம் அது.

காச்சின் எனப்படும் பர்மா இனம், கரென் இனம், சின், மோன், ராக்கைன், ஷான், கயா போன்ற பல குழுக்களை தங்கள் நாட்டு குடிமக்களாக அங்கீகரித்த அந்த சட்டமானது, இலாவகமாக ரோஹிங்கிய முஸ்லிம்களை மட்டும் தவிர்த்தது. அதற்கு வழி செய்யும் வகையில் அந்த சட்டத்தில், “1826 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்த மண்ணில் குடிபெயர்ந்தவர்களாக இருக்க வேண்டும்” என்றவொரு விதியை சேர்த்துக் கொண்டது.

**குடியுரிமை இழப்பு :**

இதன் விளைவு, ஐந்து நூற்றாண்டுகளாக மியான்மரில் வாழ்ந்து வந்த மக்கள் தங்கள் குடியுரிமையை இழந்தனர்.

சொந்த நாட்டிலேயே அகதிகளாக, இரண்டாம் தர குடிமக்களாக வாழும் அவலம் நேர்ந்தது. ஆனால், வரலாறு அவர்களை மியான்மரின் குடிமக்களாகவே அடையாகம் கண்டு வந்துள்ளது.
1948 முதல் 2010 வரை, மியான்மரில் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் ரோஹிங்கிய மக்கள் தங்கள் வாக்குகளை செலுத்தி வந்திருக்கின்றனர். 1982 ஆம் ஆண்டுக்கு பிறகு அவர்களுக்கு தற்காலிக அடையாள அட்டை **(temporary scrutiny cards)** ஒன்று வழங்கப்பட்டது.

**அசின் விராதுவின் 969**

969 இயக்கம் (969 Movement) என்பது பௌத்தர்களை பெரும்பான்மையாகக் கொண்ட மியன்மாரில் இஸ்லாமிய பரம்பலை எதிர்க்க உருவாக்கப்பட்ட ஒரு தேசியவாத அமைப்பாகும்.

மியன்மாரின் சர்ச்சைக்குரிய பௌத்த மதகுரு அசின் விராது தேரர் இதன் தலைவராக இருந்து செயற்படுகிறார்.

இவ்வியக்கம் சர்வதேச மட்டத்தில் பலத்த விமர்சனத்திற்கு உள்ளானது. பன்னாட்டு ஊடகங்கள் இதன் தலைவர் அசின் விராது தொடர்பில் பலத்த விமர்சனைத்தை முன்வைத்தன.

அமெரிக்காவின் டைம் பத்திரிக்கை “பௌத்த பயங்கரவாதத்தின் முகம்” என்று இவரை விமர்சனம் செய்திருந்தது.

மியன்மாரில் முஸ்லிம் சிறுபான்மையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளின் சூத்திரதாரியாக இருப்பது இவரும், இவருடைய 969 இயக்கமும் தான். மியன்மாரின் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிராக வன்முறைகளை இவரே வழிநடத்தி வருகிறார். இந்த அமைப்பை வழிநடத்தும் அஸின் விராது தேரரை “பர்மாவின் பின்லேடன்” என சர்வதேச ஊடகங்கள் வர்ணிக்கின்றன.

**ஆயுத போராட்டத்தில் ரோஹிங்யா :**

மியான்மர் தேசத்தில் கடந்த 2012-ம் ஆண்டு முதல் மனித உரிமைக்காக “அரக்கான் ரோஹிங்யா இரட்சணிய சேனை” என்ற பெயரில் ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த அமைப்பு, மியான்மர் ராணுவத்தினர் மற்றும் போலீஸ் படையினர் மீது தாக்குதல் நடத்திவருகிறது.

அரக்கான் ரோஹிங்யா இரட்சணிய சேனை **Arakan Rohingya Salvation Army, (ARSA)**, என்றும் அழைக்கப்படுவது, மியான்மரின், வடக்கு ராகினி மாநிலக் காடுகளில் செயல்படும் ரோஹிங்யா கிளர்ச்சி குழு ஆகும்.

சர்வதேச நெருக்கடிக் குழுவின் 2016 திசம்பர் அறிக்கையின்படி, ஏஆர்எஸ்ஏ உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் சிட்வெவில் சிறையில் அடைக்கப்பட்ட நபர்களை விசாரணை செய்த போலீசார் இக் குழுவின் குறிக்கோள், மியான்மரில் ”ரோஹிங்ஜியருக்கான ஜனநாயக முஸ்லிம் அரசை” உருவாக்குவதே என்றனர்.

**ஐ.நா. மனித உரிமைக் குழு அறிக்கை :**

ஐ.நா. மனித உரிமைக் குழு அறிக்கையின்படி உயிருக்குப் பயந்து ஆயிரக்கணக்கான ரோஹிங்யா மக்கள், வங்கதேசம், இந்தியா உள்ளிட்ட நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்றனர். மிஷோரத்தில் உள்ள சிஷா பகுதியில் மியான்மர் அகதிகள், முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மியான்மரில் ரோஹிங்யா மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்படும் வன்முறையைக் கட்டுப்படுத்த, ஐ.நா., தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுமென வங்கதேசம் பல முறை கோரிக்கை விடுத்தது. மியான்மர் விவகாரம் தொடர்பாக விவாதிக்க, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை உடனடியாகக் கூட்ட, பிரிட்டன் கோரிக்கை விடுத்தது. மியான்மர் வன்முறையை செயற்கைக்கோள் புகைப்படங்களைக் கொண்டு தொடர்ந்து ஆராய்ந்துவருவதாக, ஐ.நா. மனித உரிமைக் குழு தெரிவித்தது.

இது தொடர்பாக ஆய்வில் ஈடுபட்ட ஐநா பிரதிநிதிகளும் மனித உரிமை ஆணைய நிர்வாகிகளுமான மார்சுகி ட்ரூஸ்மேன், ராதிகா மற்றும் கிறுஸ்டோஃபர் சிடோட்டி ஆகியோர், மிகப்பெரிய இன அழிவே அங்கு நடைபெற்றதாகவும், முழுக்க முழுக்க மியான்மர் இராணுவத்தின் நேரடி ஆதரவுடன் அவை நிகழ்த்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

# தமிழகத்தில் போராட்டத்தில் குதித்த 600 ஈழத்தமிழ் ஏதிலிகள்



தமிழகத்தில் வசிக்கும் சுமார் 600 ஈழத் தமிழ் ஏதிலிகள் குடியுரிமை கோரி சென்னை எழும்பூரில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன் இந்தியாவில் அதிக காலம் தங்கியிருப்பதற்கான அபராதத் தொகையை குறைக்கக் கோரியும் அவர்கள் மனு ஒன்றை அளித்துள்ளனர். ஏதிலி அந்தஸ்து தமது சுதந்திரத்தையும் வாழ்க்கையில் வாய்ப்புகளையும் கட்டுப்படுத்துகிறது. தங்கள் பிள்ளைகளுக்கு சரியான வேலை கிடைக்கவில்லை.

அவர்கள் கல்லூரியில் பட்டம் பெற்றாலும், தனியார் நிறுவனங்கள் அவர்களை வேலைக்கு அமர்த்துவதில்லை, அரச வேலைக்கு விண்ணப்பிக்க முடியாது. எனவே அவர்களில் பலர் அன்றாடக் கூலி வேலைகளில் ஈடுபடுகிறார்கள் என்று போராட்டத்தில் ஈடுபட்ட ஈழ ஏதிலிகள் தெரிவித்துள்ளனர்.

முகாமுக்கு வெளியே வசிக்கும் ஈழத்தமிழ் ஏதிலிகள் இந்தியாவில் அதிக காலம் தங்கியதற்காக அபராதம் செலுத்த வேண்டும்.

பல ஏதிலிகள் தாயகம் திரும்ப அல்லது தங்கள் உறவினர்களைப் பார்க்க விரும்பினாலும், அவர்கள் செலுத்த வேண்டிய அபராதத் தொகை மிக அதிகமாக உள்ளது.

இந்தியாவில் அதிக காலம் தங்கினால் ஆண்டுக்கு தலா 3600 ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும், அத்துடன் வீசாவைப் பெறுவதற்கு 13,500 ரூபாவை செலுத்த வேண்டியுள்ளதாக ஏதிலியாக வாழ்ந்து வரும் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணியின் செயலாளருமான ஜி ஞானராஜா தெரிவித்தார்.

ஞானராஜா 1983 ஆம் ஆண்டு யுத்தம் ஆரம்பமான காலப்பகுதியில் கிளிநொச்சியை விட்டு தனது பெற்றோருடன் இந்தியாவிற்கு சென்றார். 33 வருடங்கள் ஆகியும் தமக்கும் குடும்பத்தினருக்கும் நிவாரண அட்டையோ, ஆதார் அட்டையோ வழங்கப்படவில்லை, ஈழ ஏதிலிகள் என்ற அடையாள அட்டைகள் மட்டுமே உள்ளன என்று ஞானராஜா கூறியுள்ளார்.

தமிழகத்தில் வசிக்கும் சுமார் ஒரு லட்சம் ஏதிலிகளில் சுமார் 20,000 பேர் சிறிலங்காவுக்கு திரும்ப விரும்புவதாக ஞானராஜா ஒப்புக்கொண்டாலும், நாட்டில் உள்ள சமூக-அரசியல் நிலப்பரப்பு பலருக்கு நம்பிக்கையைத் தூண்டவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்கள் கல்வியை இடைநிறுத்துவது அதிகரிப்பு

## சிறார் தொழிலாளிகளாக பலர் மாறியுள்ளனர்



கொரோனா தொற்று நோய் பரவலுக்கு பின்னர் யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்கள் படிப்பை இடைநிறுத்துவது அதிகரித்துள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் கல்வித்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலை கல்வியை நிறுத்திய சிறுவர்கள் கூட யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கூலி தொழில்களை செய்து, சிறார் தொழிலாளிகளாக மாறியுள்ளனர். கொரோனா காலத்தில் இவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கிய பொருளாதார வறுமை நிலை காரணமாக பிள்ளைகள் கூலி வேலைகளில் ஈடுபட்டனர்.

கொரோனா தொற்று நோய் பரவல் முடிவடைந்துள்ள நிலையில், இந்த பிள்ளைகளில் குறைந்த எண்ணிக்கையிலான பிள்ளைகளே மீண்டும் பாடசாலைகளுக்கு திரும்பியுள்ளனர். அதேவேளை யாழ்ப்பாணத்தில் கனிஷ்ட வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் எழுதவும் வாசிக்கவும் தெரியாத நிலைமையில் இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இந்த நிலைமையை மாற்ற மிக துரிதமான வேலைத்திட்டத்தை உருவாக்க வேண்டியது அவசியம் என யாழ் கல்வித்துறை அதிகாரிகள், மாவட்ட நிர்வாக அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாடசாலைகளில் 9 ஆம் தரத்தில் பயிலும் மாணவர்கள் மத்தியிலேயே இந்த நிலைமையை அதிகளவில் காணக்கூடியதாக உள்ளது. இந்த மாணவர்களால் எழுத முடியாமல் இருப்பதுடன் மிக இலகுவான வார்த்தைகளை கூட எழுத முடியாத நிலைமையில் இருக்கின்றனர் எனவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# கஜேந்திரகுமார் கைதில் சந்தோசப்படும் கம்மன்பில



நாட்டில் பிரிவினைவாதத்தை ஊக்குவித்து வந்த கஜேந்திரகுமார் பென்னம்பலத்தை கைது செய்ததில் மகிழ்ச்சி அடைவதாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்பன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

பொலிஸ் அதிகாரிகளின் சேவையை பாதிக்கும் வகையில் செயற்பட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கைது செய்யப்பட்டார் என்ற சந்தோஷமான செய்தி கிடைக்கப்பெற்றுள்ளது. அதாவது சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நினைத்து கொண்டு இருக்கிறார்கள் அவர்கள் இருப்பது நீதிமன்றத்திற்கு மேல் என்று.

ஆனால் அது அவ்வாறு இல்லை என இந்த கைது சம்பவத்தின் மூலம் தெளிவாகிறது. விசேடமாக கஜேந்திரகுமார் நாடாளுமன்ற உறுப்பினராக வந்து பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகளிற்கு இடையூறு செய்வது முதல் முறை அல்ல

அதாவது மாணவர்களின் பரீட்சை விடயத்திலும் அவ்வாறு இடையூறு செய்ய முடியாது என தற்போது கஜேந்திரகுமாருக்கு புரிந்திருக்கும். பொலிஸ் அதிகாரிகளின் அதிகாரத்தை மாகாண சபைக்கு வழங்குவதற்கு முன்னிலையில் நிற்பவர் இந்த கஜேந்திரகுமார் தான்.

நினைத்து பாருங்கள் மாகாண சபையிற்கு அதிகாரத்தை வழங்கினால் என்ன நடக்கும் என்று .இதேவேளை நேற்றையதினம் காலை கைது செய்யப்பட்டிருந்த கஜேந்திரகுமார் புதன்கிழமை மாலை பிணையில் விடுவிக் கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




# தங்கம் கடத்திய முஸ்லீம் எம்.பிக்கு ராஜமரியாதை! தமிழ் எம்.பிக்கு அவமானமா?



நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வார்த்தைப் பிரயோகம் மற்றும் அவர் செயற்பட்ட விதம் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

தவறிழைப்பவர்கள் எவராயினும் அவர்களுக்கெதிராக பக்கசார்பின்றி சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஆனால் இந்த அரசாங்கத்தில் சட்டவிரோத செயலில் ஈடுபட்ட ஆளுந்தரப்பு எம்.பி.யான அலி சப்ரி ரஹீமுக்கும் ஒருதலை பட்சமாகவும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கு பாதகமாகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் வார்த்தைப் பிரயோகம் மற்றும் அவர் செயற்பட்ட விதம் என்பவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆனால் எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அவர் தனது சிறப்புரிமை மீறப்படுவதாக சபாநாயகரிடம் அறிவிக்கவிருந்த சந்தர்ப்பத்தில் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

ஆனால் ஆளுந்தரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதனை விட பாரிய தவறுகளை இழைத்திருந்தாலும், மிகவும் பாதுகாப்பாக சமூகத்தில் நடமாடிக் கொண்டிருக்கின்றனர்.

அலி சப்ரி ரஹீம் 3 கிலோ தங்கம் மற்றும் கையடக்க தொலைபேசிகளை கடத்த முற்பட்ட அன்றைய தினத்தில் கூட நாடாளுமன்ற அமர்வில் கலந்து கொண்டார்.

700 மில்லியன் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய இடத்தில், 7.4 மில்லியன் மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்ட விரோத செயலில் ஈடுபட்ட ஆளுந்தரப்பு எம்.பி. நாடாளுமன்றத்திற்கு வருகின்றார். ஆனால் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்.பி. கைது செய்யப்படுகின்றார். இது இனவாத கருத்தல்ல.

தெற்கு மக்களுக்கு நாடகமொன்றை அரங்கேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. சிங்கள பௌத்த மக்களிடம் வடக்கின் தமிழ் பிரதிநிதியொருவரை கைது செய்துவிட்டோம் எனக் காண்பிக்க முயற்சிக்கிறது. இது தேர்தலை இலக்காகக் கொண்டு அரங்கேற்றப்படும் நாடகமாகும் எனவும் தெரிவித்தார்.



# ஒரு பொது நினைவுச்சின்னத்தை ஏன் உருவாக்க முடியாது?

போரில் உயிர்நீத்த அனைவருக்குமாக ஒரு பொதுவான நினைவுச் சின்னத்தை உருவாக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. தமிழ்க் கட்சிகளில் சில அதை எதிர்க்கின்றன் சில அதை ஆதரிப்பதாகத் தெரிகின்றது.

போரில் உயிர் நீத்த எல்லாருக்குமான நினைவுச் சின்னம் என்பது உலகில் ஏற்கனவே பல நாடுகளில் உண்டு. குறிப்பிட்ட நாட்டில் அல்லது குறிப்பிட்ட பிரதேசத்தில் போரில் உயிர்நீத்த அனைவருக்குமானதாக அது அமையும். அதற்கு முகம் இருக்காது. ஆளடையாளம் இருக்காது.அது போர் வெற்றியையும் பிரதிபலிக்காது தோல்வியையும் பிரதிபலிக்காது. குறிப்பாக, நிலைமாறுகால நீதியின் ஒரு பிரிவாகிய இழப்பீட்டு நீதியின் கீழ் அவ்வாறு நினைவுச் சின்னங்களை உருவாக்குவதற்குப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிமையுண்டு.

ஆனால் இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் நிலைமாறுகால நீதி தொடர்பான வாதப்பிரதி வாதங்களின்போது ஒரு விடயம் சுட்டிக்காட்டப்படுவதுண்டு. இலங்கைத்தீவில் நிலை மாற்றம் ஏற்படவில்லை என்பதே அது.இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள்தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. உளவியல் மோதல் இப்பொழுதும் உண்டு. ஆயுத மோதல் ஒரு காரணம் அல்ல. அது விளைவுதான். ஆயுத மோதல்களுக்கு காரணம் இன ஒடுக்குமுறைதான். எனவே இன ஒடுக்குமுறை முடிவுக்கு வரும் பொழுதே இலங்கைத் தீவில் நிலை மாற்றம் ஏற்படும். அதாவது போருக்கு பிந்திய, அல்லது பிணக்குக்கு பிந்திய, என்று அழைக்கத்தக்க ஒரு நிலை இலங்கைத்தீவில் இப்பொழுதும் ஏற்படவில்லை

உதாரணமாக, தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்தது. பொருத்தமான பொருளாதார விடுதலை இன்றுவரை கிடைக்கவில்லை. ஆனாலும் கறுப்பின மக்கள் ஒப்பீட்டளவில் அரசியல் விடுதலையை அனுபவிக்கும் ஒரு சூழல் அங்கே உருவாகிவிட்டது. அதனால்தான் நிலைமாறுகால நீதியை அங்கே ஒப்பீட்டளவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்க முடிந்தது.

ஆனால் இலங்கைத்தீவில் நிலைமை அப்படியல்ல. இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள்தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. மோதல்களுக்குக் காரணமான இன ஒடுக்குமுறை இப்பொழுதும் உண்டு. அதனால்தான் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சிங்கள பௌத்த மயமாக்கலுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள பௌத்த மயமாக்கல் எனப்படுவது இனக் ஒடுக்குமுறையின் ஒரு பகுதிதான். தமிழ் மக்களை ஒரு தேசமாக வனையும் அம்சங்களை அழித்து ஒழிப்பது, தமிழ்மக்களின் தேசியா இருப்பை அழிப்பதுதான் இன ஒடுக்குமுறையின் பிரதான இலக்கு.

இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் அரசாங்கம் கூறுவதுபோல 2009க்கு பின்னரான காலகட்டத்தை பிணக்கிற்குப் பின்னரான அதாவது இனப்பிரச்சினைக்குப் பின்னரான காலகட்டம் என்று அழைக்க முடியாது. அதுபோலவே அரசுசார்பற்ற நிறுவனங்கள் அழைப்பதுபோல போருக்கு பின்னரான காலகட்டம் என்றும் அழைக்க முடியாது. மாறாக நான் எனது கட்டுரைகளில் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதைப்போல, ஆயுத மோதல்களுக்குப் பின்னரான காலகட்டம் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் உளவியல் மோதல்கள் இப்பொழுதும் உண்டு.

ஆயுத மோதல்களின்போது கைப்பற்றப்பட்ட நிலங்கள் இப்பொழுதும் அரசு படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. அங்கெல்லாம் அவர்கள் விகாரைகளை அமைத்து சிங்களபௌத்த மயமாக்கலை முன்னெடுத்து வருகிறார்கள். உயர் பாதுகாப்பு வலையங்கள் இப்பொழுதும் உண்டு. இலங்கைத்தீவின் மொத்தப் படைக் கட்டமைப்பில் மூன்றில் இரண்டு பகுதி வடக்குக் கிழக்கில்தான் உண்டு. போர் முடிவுக்கு வந்துவிட்டது என்றால் எதற்காக அளவுப் பிரமாணத்துக்கு அதிகமாக படையினரை தமிழ்ப் பகுதிகளில் பேண வேண்டும்? கண்ணுக்குத் தெரியாத ஒரு எதிரிக்கு எதிராக அரசாங்கம் தொடர்ந்தும் தன்னை தயார் படுத்தி வருகின்றதா?

அதுதான் பிரச்சினையே.அரசாங்கம் தமிழ் மக்கள் தேசமாக இருப்பதனை அச்சுறுத்தலாகப் பார்க்கின்றது. அதனால்தான் தமிழர்கள் தேசமாக இருப்பதை அழிக்கும் விதத்தில் சிங்கள பௌத்த மயமாக்கலை திணைக்களங்களுக்கூடாக முன்னெடுக்கின்றது. எனவே இலங்கைத்தீவில் கடந்த 14 ஆண்டுகளாக நிலவி வரும் அரசியற் சூழலை ஆயுத மோதல்களுக்கு பின்னரான ஒரு காலகட்டம் என்றுதான் அழைக்க வேண்டும். இங்கு நிலை மாற்றம் ஏற்படவில்லை.

அவ்வாறு நிலை மாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில், போரில் உயிர்நீத்த எல்லாருக்குமாக ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க முடியாது. அதை போரில் சம்பந்தப்பட்ட அனைவரும் அல்லது போரால் பாதிக்கப்பட்ட அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்கில்லை. அவ்வாறு எல்லாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சூழல் எப்பொழுது தோன்றும் என்றால், மெய்யான பொருளில் நிலைமாற்றம் ஏற்படும் பொழுதுதான். இங்கு நிலை மாற்றம் எனப்படுவது இன ஒடுக்குமுறை முடிவுக்கு கொண்டு வரப்படுவதுதான். அதாவது இலங்கைத்தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்குவதுதான்.

எனவே இப்பொழுது விடயம் தெளிவாகத் தெரிகிறது. இலங்கைத்தீவின் பல்லினச் சூழலைபல்மதச் சூழலைபல மொழிச் சூழலை உறுதிப்படுத்தாதவரை நல்லிணக்கத்தை அதன் மெய்யான பொருளில் கட்டி எழுப்பாதவரை எல்லாருக்கும் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க முடியாது.

ஏனெனில் போரில் உயிர் நீத்தவர்கள் என்பது ஒரு பொதுவான வகை. அதற்குள் போராளிகள் வருவார்கள்.படைத்தரப்பு வரும். பொதுமக்கள் வருவார்கள். சில சமயங்களில் வெளிநாட்டவர்களும் வருவார்கள். அதன்படி போருக்கு பின்னரான ஒரு பொது நினைவுச் சின்னம் எனப்படுவது கொன்றவர்களையும் கொல்லப்பட்டவர்களையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களையும் அவர்களைக் காணாமல் ஆக்கியவர்களையும்இனப்படுகொலை புரிந்தவர்களையும் இனப்படுகொலைக்கு ஆளாகியவர்களையும் ஒன்றாக நினைவுகூரும் சின்னங்களாகவே அமைய முடியும்.

தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் பட்சத்தில் அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை குறித்து தமிழ் மக்கள் சிந்திக்கலாம்.ஆனால் நீதிக்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக காணப்படும் ஒரு நாட்டில், யுத்த வெற்றி நினைவுச் சின்னங்களைக் கொண்டாடும் ஒரு நாட்டில், கொலை செய்தவரையும் கொல்லப்பட்டவரையும் ஒன்றாக ஒரு சின்னத்துக்குள் கொண்டு வருவது சாத்தியமே இல்லை.

அதுமட்டுமல்ல பொத்தாம் பொதுவான ஒரு நினைவுச் சின்னம் எனப்படுவது இனப்படுகொலையால் உயிரிழந்தவர்களை போரில் உயிர் இழந்தவர்கள் என்ற ஒரு பொதுவான வகைக்குள் அடக்கிவிடும். இனப்படுகொலையால் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும்போது அங்கே இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக்கோரும் ஓர் அரசியல் இருக்கும். ஆனால் போரில் உயிர் நீத்தவர்கள் என்று வரும்பொழுது அங்கெ இனப்படுகொலை என்ற சுட்டிப்பான அம்சம் போர் என்ற பொதுவான அம்சத்தில் பின்தள்ளப்பட்டுவிடும். இது தமிழ் மக்களைப் பொறுத்வரை அவர்களுடைய நீதிக்கான கோரிக்கையை மழுங்கடிக்கும் ஒரு நடவடிக்கை என்றே பார்க்கப்படும். ஏனென்றால் இனப்படுகொலைக்கு நீதி கிடைத்தால்தான் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் சாத்தியப்படும். நல்லிணக்கத்தை உருவாக்கினால்தான் ஒரு பொது நினைவுச் சின்னம் சாத்தியப்படும்.

எனவே முதலில் மூன்று இனங்களுக்கும் இடையிலே மெய்யான பொருளில் நல்லிணக்கத்தை ஸ்தாபிக்கும் விதத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இது முதலாவது விடயம்.இரண்டாவது விடயம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் என்ற அடிப்படையில் போராட வந்து அதில் உயிர் நீத்த அனைவருக்குமாக ஒரு பொது நினைவுச்சின்னத்தை உருவாக்கக்கூடிய சூழல் இன்றுவரை உருவாகவில்லை என்பதனை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். அப்படி ஒரு நினைவு சின்னத்தை உருவாக்குவது என்றால் அதற்கு முதலில் தமிழ் மக்கள் மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்குமான ஒரு பொது நினைவு நாளை கண்டுபிடிக்க வேண்டும்.ஆனால் இப்பொழுதும் தமிழ்த் தேசிய அரசியலில் ஒவ்வொரு இயக்கங்களுக்கும், கட்சிக்கும், தனிநபர்களுக்குமான நினைவு நாட்களும் நினைவுச் சின்னங்களுந்தான் உண்டு. ஒரு பொதுவான நினைவு நாளை கண்டுபிடிக்கும் அளவுக்கு தமிழ்த்தேசிய அரசியலின் ஜனநாயக இதயம் இனிமேற்றான் செழிப்படைய வேண்டியிருக்கிறது. அதனால் ஒரு பொது நினைவுச் சின்னத்துக்கு இப்பொழுதும் வாய்ப்பில்லை.

அவ்வாறான ஒரு பொது நினைவுச் சின்னத்தை குறித்து நான் ஏற்கனவே எழுதியுள்ளேன்.அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் முன்வைக்கும் வாதம் என்னவென்றால், தியாகிக்கும், துரோகிக்கும் ஒரேடியாக நினைவுச் சின்னத்தை அமைப்பதா என்பதுதான்.

அவர்களுக்கு பொது நினைவுச் சின்னம் என்றாலே என்னவென்று தெரியவில்லை. உலகில் இதுவரை உருவாக்கப்பட்ட இது போன்ற பொது நினைவு சின்னங்களுக்கு முகம் கிடையாது. தனிப்பட்ட கட்சி அல்லது இயக்க அடையாளம் கிடையாது. அந் நினைவு சின்னம் அரூபமானது.அது தமிழ் மக்களுக்காக போராட வந்த எல்லோருக்குமானது. ஒரு இயக்கத்துக்கு உரியது அல்ல. ஒரு கட்சிக்கு உரியது அல்ல.அது பொதுவானது. ஒரு தேசத்துக்கானது. ஆனால் அப்படி ஒரு நினைவுச் சினத்தை சின்னத்தை தமிழ் மக்கள் இன்றுவரை கண்டுபிடிக்க முடியாதிருக்கிறார்கள்.

அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை குறித்து உரையாடும் பொழுது இங்கு தென்னாபிரிக்க உதாரணத்தைக் காட்டலாம். தென்னாபிரிக்காவில் “சுதந்திரப் பூங்காவில்” அவ்வாறான ஒரு சின்னம் உண்டு.அந்த நாட்டின் வெவ்வேறு பிராந்தியங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட அந்தந்த பிராந்தியங்களின் மண்ணின் இயல்பைப் பிரதிபலிக்கும் பாறைகள் அங்கே ஓர் ஒழுங்கிற்குள் வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பாறைகளுக்கு இடையிலான நிலப்பரப்பிலிருந்து புகை எழுந்தபடியிருக்கும். தென்னாபிரிக்கர்களைப் பொறுத்தவரை புகையானது இறந்தவர்களின் ஆத்மாக்களோடு தொடர்பு கொள்வதற்கான ஒரு ஊடகமாகக் கருதப்படுகிறது. தென்னாபிரிக்காவில் சுதந்திரப் பூங்கா என்று அழைக்கப்படும் நினைவு வளாகமானது இனப்படுகொலைக்கு எதிரான ஒரு நினைவு வளாகமாகவும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வளாகம் அமைந்திருக்கும் நிலப்பரப்புக்கு நேர் எதிராக தென்னாபிரிக்கர்களை அடிமை கொண்ட டச்சு ஆக்கிரமிப்பாளர்களின் நினைவுச் சின்னம் காணப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்துவிட்டது. அதைவிட முக்கியமாக அங்கே நெல்சன் மண்டேலா என்ற ஒரு மகத்தான ஆளுமை இருந்தது. அது பண்புருமாற்றத்துக்கு-**Transformation-** தலைமை தாங்கியது. நிலைமாறு கால நீதிச் செய்முறைகளுக்கு தலைமை தாங்கியது. எனினும் அங்கே போரில் ஈடுபட்ட வெவ்வேறு இனக்குழுக்களுக்கு இடையே ஆறாத காயங்கள் இப்பொழுதும் உண்டு. பகையும் வன்மமும் பழிவாங்கும் உணர்ச்சியும் உண்டு.இந்த அடிப்படையில் சிந்தித்தால் தென்னாபிரிக்காவில் ஒரு சுதந்திரப் பூங்காவை உருவாக்கியது போன்று இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் ஒரு நினைவு வளாகத்தை உருவாக்க முடியுமா ?

நிச்சயமாக இல்லை. ஏனென்றால் இங்கே நிலைமாற்றம் அல்லது பண்புருமாற்றம் ஏற்படவில்லை. அது, மூன்று இனங்களுக்கிடையில் மட்டுமல்ல, தமிழினத்துக்குள்ளும் இனிமேற்றான் ஏற்பட வேண்டியிருக்கிறது. இவ்வாறான ஓர் அரசியற் சூழலில் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை குறித்த உரையாடல்களுக்கு இலங்கைத் தீவும் தயாராக இல்லைத்தமிழரசியலும் தயாராக இல்லை.



நிலாந்தன்

1996 இல்செம்மணியில் சிறிலங்கா இராணுவத்தினரால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டவர்கள் தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளங் காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு காவற்றுறையினருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தியும் அவரது உறவினர்களும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு செம்மணியில் உயிரிழந்தது தொடர்பாக சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதிய **“Schoolgirl Rape & Four Murders”** எனும் நூல் சிட்னியில் கடந்த வருடம்வெ ளியிடப்பட்டுள்ளது.

**வரலாற்றுச் சாட்சியம் :**

1996 செப். ஏழாம் திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டுப் பாலியல்வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டதால் உயிரிழந்தார். கிருசாந்தியைத் தேடி இராணுவமுகாமிற்குச் சென்ற தாயாரான திருமதி இராசம்மா, சகோதரர் பிரணவன், அயலவர் கிருபாமூர்த்தி ஆகியோரும் இராணுவத்தினராற் படுகொலை செய்து புதைக்கப்பட்டனர்.

செம்மணி படுகொலை தொடர்பாக சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதிய **“Schoolgirl Rape & Four Murders”** எனும் நூலில் குடும்ப உறவினர்களின் சாட்சியங்கள் மற்றும் செம்மணியில் உள்ள குழிகளில் இருந்து உடல்களை தோண்டி எடுத்ததைத் தொடர்ந்து பிரதிவாதிகளின் வாக்கு மூலங்கள் – இக் கொடூர நிகழ்வுகளின் வாக்கு மூலங்களையும் பதிவு செய்துள்ளார்.

**“சமாதானத்துக்கான போர்” :**


“சமாதானத்துக்கான போர்” மூலம் இராணுவத்தினர் யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின்னர் யாழ் நகரத்திலிருந்த இராணுவத்தினருக்குப் பொறுப்பாக “மேஜர் ஜெனரல் ஜானகப் பேரேரா இருந்தபோது குடாநாட்டில் கைதாவோர், காணாமற்போவோர் பட்டியல் நாள் தோறும் அதிகரித்துச் சென்றதுடன், பெண்கள் மீதான துன்புறுத்தல்களும் மக்கள் உயிரிழப்புகளும் அதிகரித்தன. 1996ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னர் யாழ்குடா முழுவதையும் தமது கட்டுப்பாட்டிற்குள் இராணுவத்தினர் கொண்டுவந்தனர். இதன் பின் நடந்த கொடூர நிகழ்வுகளை சிறி பகவன்தாஸ் எழுதிய **“Schoolgirl Rape & Four Murders”** வரலாற்று ஆவணமாக பதிவிட்டுள்ளார்.

சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கா 1994இல் புதிதாக ஆட்சியினைப் பொறுப்பேற்ற பின், அவர் தலைமையிலான அரசாங்கம் மனித உரிமைகளை நிலை நாட்டுவதற்காக காணாமற்போனவர்கள் புதைக்கப்பட்ட சூரியகந்த புதைகுழிகள் போன்ற பல புதைகுழிகளை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தியதோடு குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தியதாக காட்டிக்கொண்டது.

ஆயினும் “சமாதானத்திற்கான போர்” என்னும் பெயரில் மீண்டும் இராணுவ நடவடிக்கைகள் 1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் பத்தொண்பதாம் திகதி புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்ததை தொடர்ந்து போர் தீவிரமாக ஆரம்பிக்கப்பட்டன. 1995 இன் இறுதிகளில் யாழ் நகரையும், 1996 இன் நடுப்பகுதிகளில் யாழ் குடாநாடு முழுவதனையும் இராணுவத்தினர் கைப்பற்றினர்.









# உலகையே உலுக்கிய செம்மணி கொடூர படுகொலை : வரலாற்றுப் பதிவுகளான செம்மணி கோரத்தை கூறும் நூல்கள்:

**செம்மணி கவிதை நூல், “School Girl Rape & Four Murders”**

**“Schoolgirl Rape & Four Murders”**

சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதிய **“Schoolgirl Rape & Four Murders”** எனும் நூலில் 1996 நடுப்பகுதிக்குப் பின்னான ஆறு மாதக் காலப்பகுதியில் காணாமற் போனோர் பட்டியல் எழுநூறிற்கு மேல் அதிகரித்ததும், செம்மணி படுகொலை தொடர்பான சாட்சியங்களையும் பதிவிட்டுள்ளார்.




மேலும் இந்நூலில் கிருசாந்தியும் அவரது உறவினர்களும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு உயிரிழந்தது தொடர்பாக நீதிமன்றில் அவர்களது உறவினர்களால் வழக்குத் தொடரப்பட்டதையும், வழக்கு நீதிமன்றில் விசாரணை செய்யப்பட்டு, வழக்கின் தீர்ப்பின்படி குற்றவாளிகளாக அடையாளங்காணப்பட்ட ஐந்து இராணுவத்தினருக்கும் ஒரு காவற்றுறையினருக்கும் தண்டனை வழங்கப்பட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்டவர்களிலில் “லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச” விசாரணையின்போது கீழ்வருமாறு வாக்கு மூலம் அளித்தார். “யாழ்குடாநாட்டில் பரவலாக கைது செய்து காணாமற்போனவர்களில் பெரும்பாலானவர்கள் சித்திரவதை செய்யப்பட்டுக் கொலை செய்யப்பட்டனர். இவர்களின் சடலங்கள் மேலதிகாரிகளின் உத்தரவின்பேரில் இரவில் எடுத்துச்செல்லப்பட்டு செம்மணியில் புதைக்கப்படுவதுண்டு. முந்நூறு, நானூறு பேரை புதைத்த புதைகுழிகளை என்னால் காண்பிக்க முடியும் என்றார். இதன்பின்னர் 1999ஆம் ஆண்டில் “லான்ஸ் கோப்ரல் சோமரட்ணா ராஜபக்ச”வினால் செம்மணியில் அடையாளம் காட்டப்பட்ட இடங்களில் புதைகுழிகளைத் தோண்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது.

அன்றைய வவுனியா மாவட்ட நீதவான் இளஞ்செழியன், றுகுணு பல்கலைக்கழக மருத்துவப்பீட பேராசிரியர் நெரியல்ல மற்றும் சட்டத்தரணிகளான கேசவன், இளங்கோ, பரமராஜா, பொன்.பூலோகசிங்கம் ஆகியோர் முன்னிலையில் 1999ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்பட்டன.

**புதைகுழி தோண்டுதல் இடைநிறுத்தம் :**

முதற்தடவையாக புதைகுழி தோண்டும் போது பதினொரு எலும்புக்கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இச்செம்மணிப் பகுதியில் அமைந்த அரியாலை கொட்டுக் கிணற்றடி, தயா கட்டடம் அமைந்துள்ள பகுதி, செம்மணி வளைவுப் பகுதியென புதைக்கப்பட்ட இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டது.

இவை யாழ் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுப் பிரேதபரிசோதனையின் பின் பதினாறு வயதுக்கும் முப்பத்தைந்து வயதுக்கும் உட்பட்டோரினதென அடையாளங் காணப்பட்டது. இரண்டாவது தடவை தோண்டுவதற்கு முன்பாக அப்பகுதியின் பல இடங்களில் இரவு நேரங்களில் மக்கள் செல்வதை இராணுவம் தடைசெய்தது. மேலும் அவ்வேளையில் அப்பகுதியில் வாகனங்கள் அதிகளவில் நடமாடியதை மக்கள் அவதானித்தார்கள். பின்னர் இரு வாரம் கழிந்த நிலையில் இரண்டாவது புதைகுழி தோண்டும் பணி ஆரம்பமாகியது. ஆறு எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. இவற்றில் ஒன்று பெண்ணினுடையதும் மிகுதி ஆண்களினுடையவையென அடையாளங்காணப்பட்டன.

அதன்பின்னர் அரச அழுத்தங்களினால் செம்மணிப் பகுதியில் மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் பணிகளை இடைநிறுத்தப்பட்டது. காலம் பல கடந்தும் இன்று வரை செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பாக எந்தவிதமான இறுதி முடிவினையும் நீதித்துறை மேற்கொள்ளவில்லை. என்பதே கவலைக்குரிய விடயமாகும்.



சரவதேச ரீதியில் கவனத்தைப் பெற்ற செம்மணி படுகொலை வரலாற்றுத் தகவல்களை ஆவணப்படுத்திய சிட்னி வழக்கறிஞர் சிறி பகவன்தாஸ் எழுதிய **“Schoolgirl Rape & Four Murders”** எனும் நூல் தமிழ் பேசும் மக்கள் மீது இழைக்கப்பட்ட அநீதிகளின் வரலாற்றுச் சாட்சியமாக அமைகிறது.

**செம்மணி கவிதை நூல்:**

யாழ்ப்பாணத்தில் இராணுவ முற்றுகையின் போது கடத்திச் செல்லப்பட்டு காணாமற் போனோராக்கப்பட்டு வதையின் பின் புதைக்கப்பட்ட எம் உறவுகளுக்கான கவிதைகள் இவை.

வெளிச்சம் வெளியீட்டுத் தொடரின் 3வது நூல். 1995இல் ரிவிரச என்ற யாழ்ப்பாண ஆக்கிரமிப்புப் போரின்பின், தென்மராட்சியிலும் வடமராட்சியிலும் தஞ்சமடைந்த தமிழ்மக்களை மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கைமூலம் சிறைப்படுத்திச் சொந்த இடங்களுக்கு அழைத்துச் சென்றது.

அக்காலகட்டத்தில் சிங்கள இராணுவம் அவர்களை யாருங்காணாமற் பிடித்துச் சென்று படுகொலைசெய்து செம்மணியிற் புதைத்த வஞ்சகச்செயலை அம்பலப்படுத்தும் பதிவுகளாக இவை அமைகின்றன. செம்மணிப் புதைகுழிகள் எம்மக்களிடையே ஏற்படுத்திய கொதிப்புணர்வின் அடையாளமாகவே இக்கவிதைகள் அமைகின்றன.

**அன்பான வாசகர்களுக்கு..!**
உலகத் தமிழர்களின் கைகளில் தவழும் மின்னிதழ் மற்றும் அச்சு வடிவிலும் தினசரி மற்றும்வார வெளியீடாக வெளிவரும் தேசியம் பத்திரிகைக்கு தமிழ்த் தேசியத்திற்கு வலுச்சேர்க்கும் ஆக்கபூர்வமான கட்டுரைகள், கவிதைகள்,உண்மைச் சம்பவங்கள், செய்திகள் போன்றவற்றை எமக்கு அனுப்பி தேசியம் பத்திரிகையை வலுவடையச் செய்யுங்கள்.
No. 27, Kannathiddy Road, Jaffna.
Tel : 021 222 7557
E-mail : thesiyamnews@gmail.com
Whatsapp : +94 76 567 3339
**தேசியம் பத்திரிகையின் மின்னிதழை பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்..!**
SCAN ME

# முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாமின் ஒரு பகுதி விடுவிப்பு



மட்டக்களப்பு, முறக்கொட்டாஞ்சேனை இராணுவ முகாம் அமைந்துள்ள தனியாருக்கு சொந்தமான காணிகள், 32 வருடங்களின் பின்னர் விடுவிக்கப்பட்டு, கையளிக்கப்பட்டன.

தனியாருக்கு சொந்தமான 8.6 ஏக்கர் காணியே கிழக்கு மாகாண கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட்டியாராட்சிளால் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்ராஜாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து, காணி உரிமையாளர்களை இனங்கண்டு உரியவர்களிடம் காணிகளை ஒப்படைக்கும் நடவடிக்கைக்காக, மாவட்ட அரசாங்க அதிபரால் கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் எஸ். ராஜ்பாபுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 59 தனிநபர்களுக்கு சொந்தமான காணிகளே, இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

# மாடுகளுக்கு வேகமாக பரவிவரும் தொற்று கல்முனையில் மாடறுக்க தற்காலிகத் தடை

நாட்டில் மாடுகளுக்கு ஒருவித தொற்று நோய் வேகமாக பரவி வருவதைக் கருத்தில் கொண்டு கல்முனை மாநகர சபை எல்லையினுள் வியாழக்கிழமை முதல் ஒரு வார காலத்திற்கு இறைச்சிக்காக மாடு அறுப்பது தடை செய்யப்படுவதாக கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி அறிவித்துள்ளார்.

தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள சில மாடுகள் கல்முனை பிராந்தியத்திலும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அது ஏனைய மாடுகளுக்கு விரைவாக பரவக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதனாலும் தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட மாட்டிறைச்சி மக்களின் நுகர்வுக்கு உகந்ததல்ல என்றும் மாநகர சபையின் கால்நடை வைத்திய அதிகாரி வழங்கிய அறிவுறுத்தலுக்கமைவாக இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பிரகாரம் கல்முனை மாநகர சபை எல்லையினுள் குறித்த காலப்பகுதியில் மாடு அறுத்தல், மாட்டிறைச்சியை விற்பனை செய்தல் மற்றும் மாட்டிறைச்சிறைச்சியை பொதி செய்தல் என்பன தற்காலிகமாக தடை செய்யப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இத்தடை உத்தரவை மீறி செயற்படுகின்ற மாட்டிறைச்சிக் கடைகளின் உரிமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சம்மந்தப்பட்டவர்களுக்கு அவர் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

# தமிழர்கள் விடயத்தில் கருணாவை வைத்து காய் நகர்த்தும் ரணில் பின்னணியில் அமெரிக்கா



ரணில் விக்ரமசிங்க என்பவர் ரவி ஜெயவர்தனவின் பின்னர் படைத்துறை, வன்முறை ரீதியாக இலங்கைக்கு வரும் சவால்களை சமாளிக்க கூடிய பின்தளத்திலிருந்து வளர்க்கப்பட்டவர் என்று பிரித்தானியாவின் வேல்ஸிலிருந்து இராணுவ ஆய்வாளர் கலாநிதி அரூஸ் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி காலத்தில் இடம்பெற்ற குழப்பங்களின் பின்னணியில் செயற்பட்ட ரணில் விக்ரமசிங்க அன்றைய காலகட்டத்தில் பெரிதாக வெளியில் தென்படைவில்லை எனவும், தற்போது அவர் வெளியில் தென்பட முக்கிய காரணமாக அமெரிக்காவின் அரசியல் நகர்வு காணப்படுவதாகவும் கூறியுள்ளார்.

இணைய ஊடகமொன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

இவ்வாறான பின்னணியிலேயே, விநாயகமூர்த்தி முரளிதரன் என்ற கருணாவிற்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

600 பொலிஸாரின் கொலையை கருணா செய்ததாக பெங்களூரை சேர்ந்த பேராசிரியரும், திருக்கோவில் முகாமில் இருந்த முன்னாள் சிறப்பு அதிரடிப்படை வீரருமான ஜனித் சமிலாவும் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடு செய்துள்ளதுடன்,குற்றப்பத்திரிகையும் தாக்கல் செய்யவுள்ளனர்.

இந்த விசாரணைகள் தீவிரமடையும் பட்சத்தில் கருணா பலரையும் கைக்காட்டி விடலாம். இதன்போது உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பலர் சிக்கலாம். அல்லது வெவ்வேறு வழக்குகளையும் தொடரலாம்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் தென்னாபிரிக்காவை போன்று உண்மைகளை கண்டறிதலும், இன நல்லணக்கப்பாடுகளும் என்ற அமைப்பின் ஊடாக இருதரப்பும் இணங்கிப்போகும் திட்டமொன்று கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கருணா என்பவர் தேவையான நேரத்தில் பயன்படுத்தப்பட்டமையினால் தற்போது அவரை வைத்து தமிழ் மக்களின் விடயத்தில் காய் நகர்த்தும் வேலையை அரசாங்கம் ஆரம்பித்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

# வெளிநாட்டுப் பிரிவினைவாத குழுக்களின் கைக்கூலியாகவே சாணக்கியன் செயற்படுகின்றார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



வெளிநாட்டுப் பிரிவினைவாத குழுக்களின் கைக்கூலியாகவே நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் செயற்படுகின்றார் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் வியாழக்கிழமை சிறப்புரிமை பிரச்சினையொன்றை எழுப்பிய அவர், இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

"வெளிநாட்டுப் பிரிவினைவாத குழுக்களின் கைக்கூலியாகச் செயற்படும் ஒருவர் நாடாளுமன்றத்தில் இருக்கின்றார். அவர்தான் இராசமாணிக்கம் சாணக்கியன். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு விருப்பம் அற்றவர்தான் அவர்.

இனப்பிரச்சினை நீடித்தால்தான் தம்மால் அரசியல் செய்ய முடியும் என அவர் கருதுகின்றார். அதனால்தான் தீர்வைக் காணும் எமது முயற்சிக்கு அவரால் எதிர்ப்பு வெளியிடப்படுகின்றது.

நாம் இனப்பிரச்சினைக்குத் தீர்வை காண முற்பட்டால் அதனைக் குழப்புமாறு வெளிநாட்டு பிரிவினைவாத சக்திகள் அவருக்கு ஆலோசனை வழங்குக்கின்றன. அந்த ஆலோசனையின் பிரகாரம்தான் அவர் கொக்கரிக்கின்றார். புதன்கிழமை இந்தச் சபையில் அவர் கொக்கரித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு நான் அரச வீடொன்றை வழங்கியுள்ளதாக அவர் கூறுகின்றார். அது பொய். அவ்வாறு எனக்கு வீடு வழங்க முடியாது.

நான் அரச வீட்டில் வசிப்பதும் இல்லை. சொந்த வீட்டில்தான் வாழ்கின்றேன். எனவே, சிறப்புரிமையைப் பயன்படுத்திக் கொண்டு சில்லறைத்தனமான கருத்துக்களை வெளியிட முற்படக்கூடாது." - என்றார்.

# எம்வி எம்பிரஸ் சொகுசுக் கப்பல் திருகோணமலையை வந்தடைந்தது!



இலங்கையை வந்தடைந்த இந்தியாவின் முதல் சர்வதேச கப்பல் பயணத்தை, இந்திய மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால 05.06.2023 அன்று கொடியசைத்து ஆரம்பித்து வைத்தார்.

இதன்படி சென்னையில் இருந்து புறப்பட்ட எம்வி எம்பிரஸ் என்ற சொகுசுக் கப்பல் திருகோணமலையை வந்தடைந்தது. திருகோணமலையை வந்தடைய அனைத்து ஏற்பாடுகளையும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் செய்ததுடன், அவர் தலைமையில்,பிரதான செயலாளர், ஆளுநரின் செயலாளர், திருக்கோணமலை கிழக்கு கடற்படை கட்டளை தளபதி,பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட பலர் உத்தியோகபூர்வமாக வரவேற்றனர்.

மேலும் அதில் வருகை தந்த பயணிகளுக்கு, திருகோணமலையில் காணப்படும் சுற்றுலா தளங்களை பார்வையிடுவதற்கான சிறப்பு ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டன.

# சுகாதாரத்துறையில் எதிர்கால வேலைத்திட்டத்தை வலுப்படுத்த சுகாதார மாநாடு!



சுகாதாரத் துறையில் எதிர்கால வேலைத்திட்டத்தை வலுப்படுத்தும் நோக்கில் சுகாதார அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாகாண சுகாதார மாநாடு செவ்வாய்க்கிழமை (06) பிற்பகல் நார ஹேன்பிட்டியில் உள்ள தேசிய இரத்த மாற்று நிலையத்தின் கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் நடைபெற்றது. இதன் போது சுகாதார துறையில் காணப்படும் குறைப்பாடுகள் மற்றும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும் இம்மாநாட்டில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாணத்தில் சுகாதார துறையில் காணப்படும் பிரச்சினைகள், மருந்துப்பற்றாக்குறை போன்ற பிரச்சினைகளை துரிதகதியில் நிவர்த்தி செய்து தருமாறு வலியுறுத்தியதோடு, அதற்கு உடனடி தீர்வு வழங்குமாறு கோரிக்கை விடுத்தார்.

# அகண்ட இந்தியா! விஸ்தரிக்கப்பட்ட அயலகம்!!

## இந்திய வெளியுறவுக் கொள்கையில் பாரிய மாற்றம்!!



## ஜெய்சங்கரின் அறிவிப்பினால் அதிர்வலைகள்!!

**தெற்காசியாவின் அதிசக்தி வாய்ந்த நாடான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் பாரிய மாற்றம் ஒன்று ஓசையின்றி ஏற்பட்டிருக்கின்றது.**

சில தினங்களுக்கு முன்னர் இந்திய வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் இந்திய தலைநகர் புதுடெல்லியில் வைத்து இந்த அதிரடித் தகவலை வெளியிட்டிருக்கின்றார்.

”மோடியின் இந்தியா - எழுச்சியுறும் வல்லரசு” என்ற தலைப்பில், நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய ஜெய்சங்கர், செல்வாக்கிலும், அபிலாசைகளிலும் மட்டுமன்றி, புவியியல் ரீதியான எல்லைக்கோட்டை பொறுத்தமட்டிலும், ”விஸ்தரிக்கப்பட்ட அயலகத்தை” கொண்ட ஒரு ”அகண்ட இந்தியாவை” கோடிட்டு காட்டி உரையாற்றி உள்ளார்.

76 வருடங்களை விரைவில் நிறைவு செய்யப்போகும் சுதந்திர இந்தியாவின் வரலாற்றில், அதன் முக்கிய அமைச்சர் ஒருவர், அதுவும் வெளியுறவு அமைச்சர், ”விஸ்தரிக்கப்பட்ட அயலகம்” மற்றும் ”அகண்ட இந்தியா” என்னும் மிக ஆழமான, அர்த்தம் பொதிந்த சொற்பதங்களை இதற்கு முன்னர் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் பிரயோகித்தது கிடையாது.

முதற் தடவையாக, விஸ்தரிக்கப்பட்ட அயலகத்துடன் கூடிய அகண்ட இந்தியா என்ற சொற்றொடர் இந்திய ராஜதந்திரத்தின் சொல் அகராதியில் தோற்றம் பெற்றிருக்கின்றது.

அதிரடியான இந்த விடயம் வெளியிடப்பட்ட சந்தர்ப்பம், அதன் முக்கியத்துவத்தை முழுமையான தாக்கத்துடன் வெளிக்கொணர்ந்திருக்கின்றது.

”மோடியின் இந்தியா – எழுச்சி பெறும் வல்லரசு” என்று ஜெய்சங்கர் எடுத்துக் கொண்ட விடயப்பொருள், எந்தவித சந்தேகத்திற்கும் இடமளிக்காமல், அவர் என்ன கூற முனைந்திருக்கிறார் என்பதை தெட்டத் தெளிவாக விளக்கி நிற்கின்றது.

ஜெய்சங்கர் பிரஸ்தாபித்திருக்கும் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் அயலகத்துக்குள், ஏற்கனவே அயல்நாடுகள் என்ற அடிப்படையில் நோக்கப்படும் பாகிஸ்தான், நேபாளம், பூட்டான், பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் இலங்கை ஆகிய நாடுகளுடன் இந்தியாவின் மேற்கு திசையில் அரபுப் பெருங்கடலோரம் அமைந்துள்ள சில நாடுகளும், கிழக்கு திசையில் அமைந்துள்ள நாடுகளான பர்மா, மலேசியா, சிங்கப்பூர், புரூனை, இந்தோனேஷியா என்பனவும் புவியியல் ரீதியில் இடம்பெற முடியுமென யதார்த்த பூர்வமாக கருதலாம்.

ஏற்கனவே, இந்தியாவின் அயலகத்தில் அமைந்துள்ள நாடுகள் என்று சர்ச்சைக்கு இடமின்றி கருதப்பட்டு வந்திருக்கும் நாடுகளின் பட்டியலில், இப்பொழுது இந்த நாடுகளையும் இந்தியா இணைத்துக் கொள்ள விரும்புகின்றது. இதுதான் இந்தியாவின் பார்வையில் அதன் விஸ்தரிக்கப்பட்ட அயலகம்.

ஜெய்சங்கரின் இந்த கருத்துக்கள், உலக இராஜதந்திர வட்டாரங்களில் இந்திய நோக்கர்களை உடனடியாக நிமிர்ந்து உட்கார வைத்திருக்கும் என்பதில் சந்தேகம் இருக்க முடியாது.

இந்தியாவின் இந்த புதிய வெளிவிவகார சித்தாந்தத்தின் அடிநாதம் என்பது ஓர் அகண்ட இந்தியா என்பதிலும் சந்தேகமில்லை.

அகண்ட இந்தியா என்ற கோட்பாடு இனி வரும் காலத்தில் இந்தியாவை கையாள முனையும் எந்தவொரு நாடும், தன் நினைவில் பதித்துக் கொள்ள வேண்டிய மிக வலுவான கருப்பொருளாக இருக்கப் போகின்றது.

இந்தியாவின் முதற் பிரதமர் நேருவின் 17 வருட ஆட்சி காலத்திலும், அவருக்குப் பின்னர் அடுத்தடுத்து வந்த பிரதமர்கள் இந்தியாவை பிராந்திய வல்லரசாக நிஜத்தில் நிரூபித்து காட்டிய இரும்பு பெண்மணி இந்திரா காந்தி உட்பட - அனைவரினதும் ஆட்சிக் காலங்களிலும் இந்திய வெளிவிவகார கொள்கைக்குள் விஸ்தரிக்கப்பட்ட அயலகத்துடன் கூடிய ”அகண்ட இந்தியா” என்ற சிந்தனைக்கு இடமிருந்ததில்லை. அதற்கான தேவையும் இருந்ததில்லை.

பஞ்சசீலக்கொள்கையை நேருவின் காலத்தில் பற்றிப் பிடித்த இந்தியா, 1962 இல் சீனாவால் முதுகில் குத்தப்பட்ட பொழுது மிகக் கொடுமையான நம்பிக்கைத் துரோகத்தை, தன்னுடன் பல்லாயிரம் மைல்கள் நீளமான எல்லையை பகிர்ந்து நிற்கும் அந்த நேச நாட்டிடம் சந்தித்தது.

இந்த படு பயங்கர ஏமாற்றம், நேருவும் அன்றைய ஆட்சியாளர்களான பல மூத்த காங்கிரஸ் தலைவர்களும் கொண்டிருந்த, வண்ணமயமான சீன நட்புறவுக் கனவுகளை ஒரே நாளில் சிதைத்து சின்னாபின்னமாக்கியது.

சீனாவின் பச்சைத் துரோகம் நேருவுக்கு அளித்த கொடுமையான அதிர்ச்சி, ஒன்றரை ஆண்டு காலத்துக்குள் அவர் திடீரென மரணமடைவதற்கு காரணமானது என்பதற்கு அப்பால், அடுத்த ஈராண்டுக்குள் பிரதமராக பதவியேற்ற, அவரது மகள் இந்திரா பிரியதர்ஷினி காந்தியின் தலைமையின் கீழ் ஒரு பிராந்திய வல்லரசாக இந்தியா வீறுகொண்டு எழுவதற்கும், தொடர்ந்து பாகிஸ்தான் உடைக்கப்பட்டு பங்களாதேஷ் உருவாக்கப்படுவதற்குமான வரலாற்று தொடர்ச்சிக்கும் வழியமைத்தது என்றால், அது எந்த விதத்திலும் தவறான கூற்று அல்ல.

இப்பொழுது இந்தியா மறுத்துரைக்க முடியாத அளவுக்கு ஆசிய அரங்கிலும், இந்தோ பசிபிக் பிராந்தியம் என அழைக்கப்படுவதும் இந்தியப் பெருங்கடலில் ஆரம்பித்து ஜப்பானுக்கு அப்பாலும் நீண்டிருப்பதுமான பெரும் பிராந்தியத்திலும் ஓர் வல்லரசாக நிமிர்ந்து நிற்கின்றது.

1962 இந்திய சீன எல்லைப் போருக்கு பின்னர், இந்தியாவின் பெரும் எதிரியாக நீடித்து நிற்கும் சீனா, கடந்த சில தசாப்தங்களில் மௌனத்துடன் கூடிய மாபெரும் ராணுவ, பொருளாதார வளர்ச்சியை பெற்று கடந்த ஒரு தசாப்த காலமாக, உலகின் முதல் நிலை வல்லரசாக கருதப்படும் அமெரிக்காவுக்கே சவால் விடுக்கக்கூடிய அளவுக்கு எழுச்சி பெற்றுள்ளது.

இன்னும் சிறிது காலத்தில் முதல்நிலை வல்லரசு என்ற அந்தஸ்துக்கான போட்டா போட்டி என்பது, அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அல்ல, மாறாக, அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையில் தான் என்பதே நடுநிலையான இராணுவ விற்பன்னர்களினதும் ஆய்வாளர்களினதும் திட்டவட்டமான கருத்தாக மாறியுள்ளது.

இந்த சூழ்நிலையில், சீன வல்லரசின் நீண்ட கரங்கள் ஆசியாவில் அதன் எதிரியான இந்தியாவை சுற்றிவளைக்கும் நீண்டகாலத் திட்டத்துடன், பல்வேறு இராணுவ மற்றும் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட கேந்திர நகர்வுகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவது பகிரங்கமான விடயம்.

இந்த திட்டவட்டமான குறிக்கோளுடன் சீனா கடந்த இரு தசாப்தங்களாக இலங்கைத் தீவில் உறுதியாக காலூன்றியிருக்கின்றது. பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லாமல் இருந்த தனது தெற்கு எல்லையில், இலங்கை தீவில் இருந்து சீனாவின் சவாலை எதிர்கொள்ள வேண்டிய ஓர் நெருக்கடி நிலைமை, இலங்கையின் சந்தர்ப்பவாத இராஜதந்திரத்தினால் இந்தியாவுக்கு சமீப காலத்தில் ஏற்பட்டிருக்கின்றது.

தனது தூரநோக்கு அற்ற நடவடிக்கைகளினால் ஓர் ராஜதந்திர சிக்கலுக்குள் மாத்திரமன்றி போர் சூழல் ஒன்றுக்குள்ளும் தான் தள்ளப்படக் கூடிய பாரிய ஆபத்து ஒன்றின் சாத்தியங்களை, கொஞ்சமேனும் கவனத்தில் கொள்ளாமல், 2006 ம் ஆண்டிலிருந்து இலங்கை கைக்கொண்ட சீனா தொடர்பான அணுகுமுறையினால் இந்த அழகிய தீவு ஓர் கண்ணிவெடிப் பிரதேசமாக தன்னை மாற்றிக் கொண்டிருக்கின்றது என்று துணிந்து கூறலாம்.

இந்தியாவை பொறுத்தமட்டில், அதன் தெற்கு எல்லையில் எச்சந்தர்ப்பத்திலும் தீ பற்றிக் கொள்ளாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக, தீயினை முன்கூட்டியே தடுத்திடக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தயார் நிலையில் இருக்க வேண்டிய கட்டாயம் அதன் மீது திணிக்கப்பட்டுள்ளது.

இந்த பின்னணியில் தான், விஸ்தரிக்கப்பட்ட அயலகத்துடன் கூடிய அகண்ட இந்தியா என்ற சிந்தனைக்கரு, இந்திய வெளியுறவு கொள்கைக்குள் உள்வாங்கப்பட்டு, அதன் வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கரின் புதுடெல்லி பேச்சின் ஊடாக பகிரங்க ப்படுத்தப் பட்டிருக்கின்றது.

ஜெய்சங்கரின் இந்த அதிரடி அறிவிப்பு செயல்வடிவம் எடுக்கும் போது, ஆசியாவின் கள நிலைமைகளில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தவே செய்யும்.

இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள், கணிசமான காலம் நிதானமாக சிந்தித்து, சகல சாதக பாதங்களையும் அலசி ஆராய்ந்த பின்னரே, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு நலன்களை முன் வைத்து, இந்தக் கருத்தியலை வெளிவிவகாரக் கொள்கைக்குள் உள்ளடக்கி இருக்கின்றார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தியாவுக்கு உரிய கோவாவை போர்த்துக்கல்லின் பிடியிலிருந்து மீட்டு இந்தியாவுடன் இணைப்பதற்கு நீண்டகால தாமதத்தின் பின்னரே, 1962 இல் அன்றைய இந்தியப் பிரதமர் நேரு இந்திய பொலீஸ் படையை அங்கு அனுப்பி காரியத்தை சாதித்தார்.

அவரின் மகள் இந்திரா காந்திக்கோ, பாகிஸ்தானை உடைத்து பங்களாதேஷ் என்கின்ற புதிய நாட்டை உருவாக்குவதில் 1971 இல் தேவையற்ற தயக்கமோ, தாமதமோ இருக்கவில்லை.

இந்த வரலாற்றுப் பின்னணியில், பிரதமர் மோடி தலைமையிலான அரசு இப்பொழுது உத்வேகத்தோடு கூடிய ஓர் புதிய பரிமாணத்துடன் தனது வெளிவிவகாரக் கொள்கையை மீள வடிவமைத்திருக்கின்றது.

இது வெறும் ஆரம்பம் மட்டுமே! இதன் தொடர்ச்சியாக இன்னும் பல நிகழ்வுகளுக்கு எதிர்காலம் காத்திருக்க வேண்டியிருக்கும்.

கச்சதீவு மாத்திரம் அன்றி, நெடுந்தீவும் கூட, விஸ்தரிக்கப்பட்ட அயலகம் என்கின்ற எல்லைக்கோட்டை தாண்டி, அகண்ட பாரதம் என்னும் பரந்த வியூகத்திற்குள்ளே வந்து விடுமா?

அந்த வகையில் பார்த்தால், யாழ்ப்பாண குடா நாட்டை அண்டிய எட்டுத்தீவுகள் மட்டுமின்றி, குடா நாடும், குடாநாட்டை கொண்டிருக்கும் வட கிழக்கு பிரதேசமும் கூட, விஸ்தரிக்கப்பட்ட அயலகத்துடன் கூடிய அகண்ட இந்தியாவிற்குள் இழுக்கப்பட்டுவிடுமா?? அந்த நிலையில் இலங்கைத்தீவின் மிகுதிப் பகுதியின் நிலைமை என்ன?

இந்த கேள்விகள் எல்லாம் சர்வதேச விவகாரங்களை கரைத்துக் குடித்திருப்பதாக கற்பனை பண்ணிக் கொண்டிருக்கும் நமது உள்ளூர், சர்வதேச விவகார விமர்சகர்கள் சிலருக்கு அர்த்தமற்ற கேள்விகளாக தோன்றலாம்.

ஆனால், மாற்றம் நிகழும் வரையில், அதற்கான அறிகுறி எதனையும் காட்டாமலே மாறிக்கொண்டிருக்கும் உலக ஒழுங்கில், குறிப்பாக, ஆசிய அரங்கில், சமீப எதிர்காலம் என்பது சீனாவை பிரதான காரணியாக வைத்துத்தான் தீர்மானிக்கப்பட வேண்டியிருக்கும் என்றால், அதில் இலங்கைத் தீவின் இயல்பான கேந்திர முக்கியத்துவம் என்பது, சங்கடமும் சஞ்சலமும் நிறைந்த பல்வேறு சாத்தியங்களை தன்னகத்தே கொண்டிருக்கின்றது என்பதை எவரும் நிராகரிக்க முடியாது.

**இத்தகைய சூழலில் இப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் ஈழத் தமிழர் பிரச்சினை எத்தகைய தாக்கங்களுக்கு உள்ளாகும் அல்லது உள்ளாகக்கூடும் என்பது கூட, இப்போது எதிர்வு கூறமுடியாத விடயமே.**

பார்த்தசாரதி



# முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின் சர்வதேச சாட்சியாளர்! துணிகரமான “மேரி கொல்வின்” பெண் பத்திரிகையாளர்!

வன்னியில் இறுதிக்கட்ட போர்க் காலங்களில் ஈழத்தமிழர்களிற்காக ஓங்கி ஒலித்த சர்வதேச பத்திரிகையாளர்களின் குரல்களில் இவரின் குரலும் ஒன்று. தற்போது அவர் குரல் ஓய்ந்தாலும் தமிழினத்தின் நெஞ்சங்களில் இவர் நிரந்தரமாய் வாழ்கின்றார். அவர் தான் மேரி கொல்வின் (Mary Colvin) எனும் துணிகரமான பெண் பத்திரிகையாளர்.

எங்கோ பிறந்து, யாருக்காகவோ உழைத்து, எங்கோ இறந்து போன கொல்வினின் வாழ்க்கையானது தமிழ் ஊடகவியலாளர்களுக்கு முன்னுதாரணமாக அமைகின்றது.

> **“ வன்னியில் இறுதிக்கட்ட போர்க்கால தமிழின அழிப்பில் ஐநாவின் பங்கை உலகறிய செய்த நேரடி சாட்சியும் “வெள்ளைக்கொடி” விவகாரத்தின் அனைத்துலக சாட்சியுமான மேரி கொல்வின் தனது வாக்குமூலத்தையும் உலகறியச் செய்துள்ளார். ”**

ஈழ விடுதலைப் போராட்டத்தை உலகளாவிய அளவில் வெளியில் எடுத்து சென்றவரும் இறுதி இன அழிப்பின் சாட்சிகளில் ஒருவருமான மேரி கொல்வின் அம்மையாரின் வரலாற்றைப் பேசும் “A Private War” திரைப்படம் ஈழத் தமிழர்களின் போர்க்கால உண்மையை உலகிற்கு வெளிக்காட்டியது.



“அது ஓர் அவசரமான அழைப்பு. ஆனால், சில மணிநேரத்தில் இறக்கப் போகும் ஒருவரின் அழைப்பு போன்று அது இருக்கவில்லை!..” என்று தொடங்கி மேரி கொல்வின் எழுதிய கட்டுரை இன்றைக்கும் இறுதுப் போர்க் குற்றத்தின் சாட்சியாக ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இறுதிப் போர் முடிந்த பிறகும், அவருக்கு மிரட்டல்கள் வந்தன. அதை அவர் பொருட் படுத்தவில்லை. தொடர்ந்தும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்தார்.

உலகத் தமிழர்களின் உள்ளத்தில் என்றும் நினைவிருக்கும் போர்ச்சூழல் ஊடகவியலாளர் மேரி கொல்வின் அம்மையாரின் ஆற்றிய பணி.

**அப்பாவி தமிழர்களின் அபயக் குரல் :**

அப்பாவிகளின் அபயக் குரல் எங்கெல்லாம் கேட்கிறதோ, அங்கு தனது இருப்பைப் பதிவு செய்பவர் பத்திரிகையாளர் மேரி கொல்வின். அல்லட்படும் மக்களின் துயரத்தை உலகத்தின் கண்களுக்கு வெளிச்சம் போட்டு காட்டிய ஊடகவியலாளரே அவர்.

வன்னியில் இறுதிக்கட்ட போர்க் கால தமிழின அழிப்பில் ஐநாவின் பங்கை உலகறிய செய்த நேரடி சாட்சியும் “வெள்ளைக்கொடி” விவகாரத்தின் அனைத்துலக சாட்சியுமான மேரி கொல்வின் தனது வாக்குமூலத்தையும் உலகறியச் செய்துள்ளார்.



மேரி கொல்வின் அவர்கள் தனது சுய வாக்குமூலத்தில் “2001ம் வருடம் வன்னியிலிருந்த ஐந்து இலட்சம் தமிழர்களின் அவலநிலையினை அறிவதற்காய் அவர்களின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நான் நுழைந்தேன். அங்கு நான் செல்வதற்கு இலங்கை அரசு அனுமதிமறுத்ததால் சிறு விளக்குகளின் ஒளியுடன், பல முட்கம்பி வேலிகளை தாண்டி, இடுப்பளவு தண்ணீரில் காட்டுப் பாதையில் பயணம் செய்தேன்.

**அனைத்துலக சாட்சிக் குரல் :**

எனை இனம் கண்டுகொண்ட படையினர் என்மீது துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டனர். நான் ஒரு பத்திரிகையாளர் என கத்திய போதும் அவர்கள் அதை ஒரு பொருட்டாய் எடுத்துக் கொள்ளவேயில்லை.

கைக்குண்டுகள் கொண்டு எனை தாக்கிய அவர்களின் முன்னால் நான் சென்றபோது நெஞ்சில் குண்டுக்காயங்களிலிருந்து இரத்தம் வழிந்துகொண்டிருந்தது.

அக்காயங்களுடனேயே எனை தாக்கிய படையினர் மிலேச்சத்தனமாக எனை அவர்களின் கனரக வாகனம் ஒன்றிற்குள் தூக்கி எறிந்தார்கள். இலங்கைப்படைகளின் தாக்குதலால் தன் கண் ஒன்றை இழந்த மேரி கொல்வின் அம்மையாரின் கூற்றே இது வாகும்.

ஈழத்தமிழர்களிற்காக ஒலித்த சொற்ப சர்வதேச பத்திரிகையாளர்களின் குரல்களில் இவரின் குரலும் ஒன்று. தமிழினத்தின் நெஞ்சங்களில் இவர் நிரந்தரமாய் வாழ்கின்றார்.



**சிரியா 2012இல் படுகொலை :**

இலங்கை, ஆப்கானிஸ்தான், செச்னியா, ஈராக், லெபனால் உட்பட உலகின் மிகவும் கொந்தளிப்பான பகுதிகளில் செய்திசேகரிப்பில் ஈடுபட்டிருந்த போதிலும் மேரி கொல்வின் தனது மனிதாபிமானத்தை ஒருபோதும் இழந்துவிடவில்லை.


2012 பெப்ரவரி 22 ம் திகதி அவர் சிரியாவில் கிளர்ச்சியாளர்களின் பிடியிலிருந்த ஹொம்ஸ் நகரில் கொல்லப்பட்டார். அவர் இருந்த இடத்தை இலக்குவைத்து தாக்குதல் நடாத்தப் பட்டது.



அவர் ஓர் சர்வதேச பத்திரிகையாளர் என்பதால் அவரை மௌனமாக்குவதற்காக இலக்கு வைத்து கொல்லப்பட்டார் என பின்னர் தெரிவிக்கப்பட்டது. இத் தாக்குதல் தற்செயலாக இடம்பெற்ற விடயமல்ல. அது ஒரு திட்டமிட்ட படுகொலை என்றே அறியப்படுகிறது.

**கிழக்கு திமோரில் பெண் குழந்தைகளை காப்பாற்றிய மேரி :**

மேரி கொல்வின் 1999 ம் ஆண்டு கிழக்கு திமோரில் முகாமொன்றில் சிக்குண்டிருந்த 1500 பெண்கள் குழந்தைகளை காப்பாற்றினார். அங்குள்ள அகதி முகாமிலிருந்து ஆண்கள் தப்பியோடிவிட்ட நிலையில் மேரி கொல்வினை அங்கிருந்து வெளியேறுமாறு அதிகாரிகள் உத்தரவிட்ட போதிலும் அவர் அதனை ஏற்கமறுத்தார். மக்களின் சேவகனாக கடமை புரிந்த மேரி, தனது செய்திகளில் அவர் இந்த செய்தி குறித்தே அதிகம் பெருமைப்படுவார்.




இளம் பத்திரிகையாளர்கள் விடயத்தில் அவர் மிகவும் பெருந்தன்மையுடன் நடந்துகொண்டார் அவர்களை தனது பாதையில் பயணிப்பதற்கான உத்வேகத்தை எப்போதும் வழங்கினார். மேரி கொல்வின் உயிரிழப்பதற்கு சில நாட்களிற்கு முன்னர் இளம் பத்திரிகையாளர் ஒருவர் அவருக்கு ஒரு மின்னஞ்சலை அனுப்பியிருந்தார்.

அதில் மேரிகொல்வினின் சிரியா குறித்த அச்சமூட்டும் செய்திகள் தன்னையும் ஒரு பத்திரிகையாளராக மாற்றியது என அவர் குறிப்பிட்டிருந்தார்.

சர்வதேச ரீதியில் இளம் பத்திரிகையாளர்களை முன்னோக்கி நகர்த்துவது மிகவும் கடினமான பணியாயினும், பல்வேறு போர்க்களங்களில் தனது உயிரை துச்சமென மதித்து மற்றய ஊடகவியலாளர்களுக்கு உறுதுணையாக இருந்தார்.

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை உலகளாவிய அளவில் வெளியில் எடுத்து சென்றவரும் இறுதி இன அழிப்பின் சாட்சிகளில் ஒருவருமான மேரி கொல்வின் அம்மையாரின் வரலாற்றைப் பேசும் “A Private War” திரைப்படமும், எங்கள் மக்களின் துயரத்தை உலகிற்கு உண்மையை வெளிச்சமாய் காட்டியுள்ளது.

மேரி கொல்வின் சிரியாவில் கொல்லப்பட்டு பதினொரு வருடங்கள் ஆகின்றது. மக்களுக்காக குரல் கொடுத்த அவர், சிரியாவில் வைத்து 2012 பெப் 22 இல் படுகொலை செய்யப்பட்டாலும் தமிழினத்தின் நெஞ்சங்களில் அவர் நிரந்தரமாய் என்றும் வாழ்கின்றார்.



- நவீனன் -



# கஜேந்திரகுமாரின் கைது ஏன்? எதனால்?

## தீவிரத் தமிழ்த் தேசியவாதம் குறி வைக்கப்படுகின்றதா?

**கடந்த 7ம் திகதி புதன்கிழமை காலை பாராளுமன்ற அமர்வில் கலந்து கொள்வதற்காக கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள தனது வீட்டிற்கு, யாழ்ப்பாணத்திலிருந்து வந்து, அங்கு தங்கி இருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கிளிநொச்சி ஜெயபுரம் பொலீஸ் நிலையத்தில் இருந்து வந்த பொலீஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டு அன்று மாலையே கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கின்றார்.**

கடந்த 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கில், மருதங்கேணியில் பொலீஸ் புலனாய்வாளர்கள் உட்பட, சில பொலீஸ் அலுவலர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றப்புகாரின் பேரிலே கஜேந்திரகுமாரின் கைது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னதாக, இதே குற்றப்புகாரின் பேரில் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு உறுப்பினர்கள், மருதங்கேணி பொலீஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு, கடந்த புதன்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

இந்தப் பின்புலத்தில், கஜேந்திரகுமாரும் கைது செய்யப்படலாம் என்ற கருத்து அரசியல் மற்றும் சட்ட வட்டாரங்களில் பரவலாக ஏற்பட்டிருந்தது. மருதங்கேணி பொலீஸார் தன்னிடம் கோரியதன் பிரகாரம், தான் வாக்கு மூலம் வழங்குவதற்கு தயார் என்றும், ஆரம்பமாகவுள்ள பாராளுமன்ற அமர்வுகள் நிறைவடைந்த பின்னரே தன்னால் அங்கு வரமுடியும் என்றும் பொலீசாரிடம் தெரிவித்திருந்த கஜேந்திரகுமார், அதற்கான கால அவகாசமும் கோரியிருந்தார்.

மருதங்கேணியில் மக்கள் சந்திப்பில் தான் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிலையில் தன்னை காணொளிப்பதிவு செய்து, தலைக் கவசத்தினால் தாக்கி, தொடர்ந்து கைத்துப் பாக்கி காட்டி மிரட்டி, தனது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறியதாக, சம்பந்தப்பட்ட பொலீஸாருக்கு எதிராக பிரேரணை ஒன்றை முன் வைத்து ஏழாம் திகதி காலை பாராளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு அவர் தயாராக இருந்தார்.

இதற்கிடையில், குறித்த சம்பவத்தை தொடர்ந்து மனித உரிமைகள் ஆணையத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளருக்கு கஜேந்திரகுமார் உடனடியாகவே தொலைபேசி ஊடாக வழங்கிய முறைப்பாட்டின் பேரில் விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

சம்பவத்துடன் தொடர்புடைய பொலீஸாரின் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படுவதற்காக, மனித உரிமைகள் ஆணையத்தின் யாழ்ப்பாண அலுவலகத்திற்கு ஏழாம் திகதி புதன்கிழமை அவர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் தான், அன்று அதிகாலை அதிரடியாக கஜேந்திரகுமார் கைது செய்யப்பட்டு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு, தொடர்ந்து கிளிநொச்சிக்கு கொண்டு செல்லப்பட்டு, அன்று மாலை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நிலையில், பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். அதற்கு முந்திய தினம் பொலீஸாரின் விண்ணப்பத்தின் பேரில் கஜேந்திரகுமாருக்கு விதிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு பிரயாண தடையும் நீதிமன்றத்தினால் விலக்கிக் கொள்ளப்பட்டது.

முன்னதாக, அன்று முற்பகல் விளக்கமறியலில் இருந்து நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு உறுப்பினர்களுக்கும் பிணை அனுமதி வழங்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கஜேந்திரகுமார் கைது விவகாரம் தொடர்பான சம்பவ கோர்வை இதுதான்.

இப்பொழுது கஜேந்திரகுமார் கைது விவகாரத்தில் சில முக்கியமான கேள்விகள் எழுந்து நிற்கின்றன. அந்த கேள்விகளுக்கான சரியான பதில்களை பெற்றுக் கொள்வதற்கு வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் யதார்த்தமான இன்றைய நிலைமையை ஒரு முறை நினைத்துப் பார்க்க வேண்டும்.

பருத்தித்துறை தொகுதிக்குள் அடங்கும் இந்தப் பிரதேசம் கடலோரமாக அமைந்திருக்கும் அழகிய கிராமங்களை கொண்ட நீண்டதொரு நிலப்பகுதி ஆகும். பருத்தித்துறை நகரின் எல்லைப் புறமாக ஆரம்பிக்கும் இந்த பிரதேசம், வடக்கில் இருந்து கிழக்காக நீண்ட தூரம் விரிந்திருக்கின்றது. கடற்றொழிலே இங்கு பிரதானம். மிகச்சிறிய அளவில் விவசாய முயற்சிகளும் உள்ளன. 2002ஆம் ஆண்டிற்கு முன்னர் யுத்தத்தினால் மிக மோசமான பாதிப்புக்களை இங்கு வாழும் மக்கள் சந்தித்துள்ளார்கள். 2004 மார்கழியில், கிறிஸ்மஸ் தினத்துக்கு மறுநாள், வீசியடித்த சுனாமி பேரலை பிரதேசத்தையே புரட்டிப் போட்டது. நூற்றுக் கணக்கில் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள், சிறுவர்கள் என மக்களின் உயிர்கள் இயற்கையின் சீற்றத்தினால் காவு கொள்ளப்பட்டன. மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக, வடமராட்சி கிழக்கு பிரதேசம் ஒரு சில ஆண்டுகளுக்குள்ளேயே மீண்டு எழுந்து, யுத்தம் முடிந்த பின்னணியில், இயல்பு வாழ்வுக்குத் திரும்பியது.

விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் போது சில தீர்க்கமான மோதல்கள் இந்தப் பிரதேசத்தில் நிகழ்ந்தன என்பது வரலாறாக இருக்கையில், முன்னாள் விடுதலைப் போராளிகள், பல்வேறு சோதனைகளுக்கு மத்தியிலும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பி தமது சொந்த மண்ணில் நிமிர்ந்து நிற்க தொடர்ந்து முயற் சிக்கின்றார்கள்.

பாதுகாப்பு படையினரின் பிரசன்னம் இப்பிரதேசத்திற்குள் பிரவேசிக்கும் போதே எவராலும் உணரப்படும். இந்தியாவில் இருந்து கடத்தி வரப்படும் கேரள கஞ்சா பெருமளவில் அடிக்கடி சிக்குவதும், சந்தேக நபர்கள் கைது செய்யப்படுவதும் சமீபகாலம் வரையில் தொடர்ந்து நிகழ்ந்து வந்திருக்கின்றது. கொரோனா தொற்று நோய் காலத்தில் இந்த சட்டவிரோத நடவடிக்கைகள் சற்று தளர்வடைந்திருந்தன அவ்வளவுதான். இப்பொழுது நிலைமையில் கணிசமான மாற்றம் காணப்படுகின்றது. இங்கு பொலீசாரின் அடக்குமுறை நன்கறியப்பட்டது மாத்திரமல்ல, நன்கு உணரப்படுவதும் ஆகும். இங்குள்ள பொலீஸ் நிலையங்களுக்கு மாற்றலாகி வரும் பொலீஸார் தொடர்ந்து பல வருடங்களாக கடமையாற்றுவது ஒன்றும் புதினம் அல்ல. சுமார் 6000 முன்னாள் போராளிகள் இப்பிரதேசத்தில் இயல்பு வாழ்க்கையில் ஈடுபட்டிருப்பதாக பொலீஸ் தகவல் ஒன்று சிறிது காலத்திற்கு முன்னர் கூறியிருந்தது. ஆதரவாளர்கள், அனுதாபிகள் என்று எல்லாம், எடுத்துக் கொண்டால் இந்த கணக்கு ஒருவேளை சரியாக இருக்கலாம்.

சுருக்கமாக, சொன்னால் நெய்தல் நிலப் பிரதேசமான, இந்த வடமராட்சி கிழக்கு வீரம் விளைந்த மண். ஆனாலும், யுத்தத்திற்கு பின்னரான கடந்த 14 வருட காலத்தில் அரசியல் சோரம் போன சக்திகள் எல்லாம், இங்கே கணிசமான அளவில் ஊடுருவி, உலா வருவதில் ஓரளவு வெற்றி கண்டுள்ளன என்று தான் கூறவேண்டும்.

இந்த பிரதேசத்துக்கு வரும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கலந்து கொள்ளும் நிகழ்வுகள் கூர்ந்து கவனிக்கப்படுவதும், சூட்சுமமான முறையில் காணொளிப்பதிவு எடுக்கப்படுவதும், தகவல்கள் சேகரிக்கப்படுவதும் புலனாய்வாளர்கள் என்று தம்மை கூறிக் கொள்ளும் அல்லது கருதப்படும் நபர்களினால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் வாடிக்கையான வேடிக்கை சமாச்சாரங்கள்.

அந்த அடிப்படையில், வடமராட்சி கிழக்கு ஒரு வித உயர் பாதுகாப்பு வலயமாகவே தொடர்ந்து, பாதுகாப்பு சம்பந்தப்பட்ட அதிகார மட்டத்தில் பேணப்பட்டு வந்திருக்கின்றது.

இந்த சூழ்நிலையில் தான், கடந்த இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை, கணிசமான கால இடைவெளிக்குப் பிறகு, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் இந்தப் பிரதேசத்தில் உள்ள மருதங்கேணி கிராமத்திற்கு சென்றிருக்கின்றார்.

மருதங்கேணி, இங்குள்ள முக்கியமான முன்னணிக் கிராமங்களில் ஒன்று. வெளியில் இருந்து யார் வந்தாலும் இங்குள்ள புலனாய்வாளர்களுக்கு உடனடியாகவே மணக்கும். அன்று, அவர்களில் இருவர், உள்ளூர் ஆதரவாளர்கள் சிலருடன் கஜேந்திரகுமார் உரையாடிக் கொண்டிருந்த திறந்தவெளிக்கு விரைந்திருக்கின்றார்கள். வட்ட மடித்து, நோட்டமிட்டவர்கள், ஒரு கட்டத்தில் நிலையெடுத்து, கஜேந்திரகுமாரின் செயற்பாடுகளை காணொளிப் படம் எடுக்க ஆரம்பித்திருக்கின்றார்கள். அதை அவதானித்த கஜேந்திரகுமார், அவர்களை அணுகி, தனக்கே உரிய பாணியில், அவர்களை யார் என விசாரித்திருக்கின்றார். ஒரு கட்டத்தில் நாம் புலனாய்வாளர்கள் என அந்த இரண்டு இளம் நபர்களும் தெரிவித்திருக்கின்றார் கள். அப்போது தான் முரண்பாடு ஆரம்பித்திருக்கின்றது.

அவர்களின் நடவடிக்கைக்கு கடும் ஆட்சேபனை தெரிவித்த கஜேந்திரகுமாரிடம் மிரண்டு போன நிலையில், அவர்களில் ஒருவர் தனது தலைக் கவசத்தால் அவரை தாக்க முற்பட்டு ஓடி விட்டார். ஓடியவரை துரத்தியும் பிடிக்க முடியவில்லை. மற்றவரை அங்கு இருந்து அகலாதவாறு கஜேந்திரகுமாரும் அவரோடு நின்றவர்களும் பார்த்துக் கொண்டார்கள். அதை அடுத்து அருகில் இருந்த பாடசாலை பரீட்சை மண்டபத்தில் கடமையில் இருந்த இரண்டு பொலீஸ் உத்தியோகத்தர்களில் ஒருவர், கஜேந்திரகுமாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதோடு, கைத்துப்பாக்கியை காட்டி அச்சுறுத்தவும் செய்திருக்கின்றார். அந் நிலையில் அங்கு வந்த மருதங்கேணி பொலீஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி, நிலைமையை சமாளித்துப் போக முயன்றிருக்கின்றார். கஜேந்திரகுமார் சம்மதிக்கவில்லை. மருதங்கேணி பொலீஸ் நிலையத்திற்கு வந்து முறைப்பாடு செய்யுமாறு பொறுப்பதிகாரி கோர, அவர் அதனை மறுத்ததோடு மனித உரிமைகள் ஆணையகத்தில் முறைப்பாடு செய்யப்போவதாக தெரிவித்துள்ளார். அத்துடன் அலைபேசி வாயிலாகவும் முறைப்பாடு செய்திருக்கின்றார்.

கஜேந்திரகுமார் விவகாரத்தில் எழுந்திருக்கும் கேள்விகளுக்கு இனி வருவோம்!.

**எதற்காக இந்த அவசரக் கைது? கஜேந்திரகுமாருக்கு இருந்த பாராளுமன்ற சிறப்பு உரிமையை பொருட்படுத்தாமல், அவர் அன்று பாராளுமன்றத்திற்கு செல்ல விரும்புகின்றார், என்பதை நன்றாக தெரிந்து கொண்டும் எதற்காக இந்த கைது வேட்டை?**

**சபாநாயகர் வரையில் விவகாரம் கொண்டு செல்லப்பட்ட பின்னரும் கூட, அவரை கைது செய்வதில் பொலீசார் தீவிரம் காட்டியது எதனால்? இந்த கேள்விகளுக்கெல்லாம் பதில் ஒன்று தான்! கைதுக்கு காரணமான மருதங்கேணி சம்பவத்தின் போது கஜேந்திரகுமார் நடந்து கொண்ட விதம்!!**

**ஒரு அரசியல்வாதி என்ற முறையில் மாத்திரம் அன்றி, ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியிலும், தனக்கு உள்ள சட்டபூர்வமான உரிமைகள் பற்றிய உணர்வோடு, அவர் சிங்கள பேரினவாதத்தின் பிடரி மயிரை ஒருமுறை உலுப்பிப் பார்க்க முயற்சித்திருக்கின்றார்.**

**அந்த துணிவும் தைரியமும், அதாவது, "தில்!." சிங்கள பேரினவாதத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் ஏதோ ஒரு மட்டத்திற்கு உறைத்திருக்கின்றது அல்லது இடித்திருக்கின்றது.**

தமிழ் மக்களின் தரப்பில் இருந்து சிங்கள பேரினவாத அதிகார பீடத்தின் எந்த ஒரு மிகச் சிறிய பிரதிநிதிக்கும் கூட, காத்திரமான சவால் விடுக்கப்படுவதை சகித்துக் கொள்ள அது தயாராக இல்லை. ஒருவரை அனுமதித்தால் மற்றவர்களும் தொடங்குவார்கள் என்பது அதற்கு நன்கு தெரியும். கஜேந்திரகுமாரின் தவறு எல்லாம் புலனாய்வாளர்களின் சட்டவிரோதமான தொல்லைகளை சகித்துக் கொள்ள மறுத்தது. சில கனவான் அரசியல்வாதிகளை போல், அவர் அதை கண்டுகொள்ளாமல் விட்டிருந்தால் பிரச்சினையே எழுந்திருக்காது.

**போர் முடிந்து 14 ஆண்டுகளுக்கு பின்னரும், வட,கிழக்கில் தொடர்ந்து நிலை நிறுத்தப்பட்டிருக்கும் பாதுகாப்பு வலைப்பின்னல், எந்த விதத்திலும், எந்த ஒரு சவாலுக்கும் உட்படுத்தப்படக் கூடாது என்று கொழும்பில் நிலை கொண்டிருக்கும் சிங்கள அதிகார பீடமும், வட,கிழக்கில் பதவியில் இருக்கும், அதன் மாவட்ட மட்டத்திலான, உள்ளூர் உயர் அதிகாரிகளும் பிடிவாதமாக இருக்கும் வரையில், இத்தகைய சம்பவங்களும், கைதுகளும் தொடரவே செய்யும்.**

**தீவிரமாக முன்னெடுக்கப்படும் தமிழ்த் தேசியவாத நடவடிக்கைகள் எங்கும் எப்பொழுதும் குறி வைக்கப்படலாம் - குறி வைக்கப்பட முடியும்.**

**எந்த நெருக்கடி நிலைமையிலும் கூட, தமிழ் மக்களின் நலன்களுக்காக, அற்ப சொற்ப அரசியல் வேறுபாடுகளை எல்லாம் ஒதுக்கி தள்ளிவிட்டு, ஒன்றுபட முடியாமல் இருக்கும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் அனைவரும் கட்டாயம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய விடயம் இது!**

பார்த்தசாரதி

# கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS



அ.கிருபாகரன்
-அதிபர்-

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேலன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும். உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.






**தலைமையகம்**
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |


## வெளிவரும்

**தேசியம் வாராந்த பத்திரிகையின் விளம்பர விலைப்பட்டியல்**

தேசியம் THESIYAM www.thesiyamnews.com

NEWSPAPER SIZES, RATE PER EDITION

### WEEKLY NEWSPAPER

| BLACK & WHITE ADVERTISEMENT | | COLOUR ADVERTISEMENT | |
|---|---|---|---|
| Front Page Top | 2000/= | Front Page Top | 4500/= |
| Front Page Bottom | 4000/= | Front Page Bottom | 6000/= |
| Back Quarter Page | 6000/= | Back Quarter Page | 8000/= |
| Back Half Page | 8000/= | Back Half Page | 10000/= |
| Back Full Page | 12000/= | Back Full Page | 22000/= |
| Inner Quarter Page | 3500/= | Inner Quarter Page | 5000/= |
| Inner Half Page | 6000/= | Inner Half Page | 8000/= |
| Inner Full Page | 10000/= | Inner Full Page | 15000/= |
| Inner Box Ad | 800/= | Inner Box Ad | 1200/= |

Tel : 021 222 7557 | +94 76 567 3339
E-mail : thesiyamnews@gmail.com
Web : www.thesiyamnews.com


CREATIVE DESIGNER
every design has a story

Logos | Flyers | Banners | Name Boards | Brochures | Catalogue | Magazines | News Papers | Product Packaging | Social Media Ads | Badges | Menu | Posters | Vouchers

+94 77 3828 594

ONE SHOP STOP FOR ALL YOUR FURNITURE & DECOR NEEDS
BIG SALE! BIG SAVINGS
# மங்களா காட்சியறை
Mangala
யாழின் தளபாட உற்பத்தியாளர்



Furniture | Furnishing | Contemporary Furniture | Ethnic Furniture | Office Furniture | Exquisite Dining Sets | Upholstered Sofas | Outdoor & Lawn Furniture | Leather Recliner | Sheesham Wood Furniture | Ottomans & Chaises | Bedroom Collections | Bunk Beds | Artifacts | Rugs & Carpets | Mattresses & Poufs | Modular Kitchen | Murals & Paintings & etc.

No. 536, K.K.S. ROAD, JAFFNA, SRI LANKA.
TEL : 021 222 8367 | +94 777 286 069




இப்பத்திரிகை 02.06.2023 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.